Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-14 27-04-2005 புதன்கிழமை ஓசை 68



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11459) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறாக கிழக்கில் ராணுவ கெடுபிடிகள் அதிகரிப்பு!

## மக்களுக்குப் பெரும் அசௌகரியம்

(நமது நிருபர்)

**யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறான விதத்தில் கிழக்கு மாகாணத்தில் பொது மக்கள் மீதும், விடுதலைப்புலிகள் மீதுமான சிறிலங்கா ஆயுதப்படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகவும், தேவையற்ற விதத்தில் மக்களுக்கு இன்னல்களை விளைவித்துவருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்பாட்டு விதிகளுக்கு மாறானவகையில் ஆயுதப்படைத் தரப்பினர் தேவையற்ற விதத்தில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதோடு பல பொருட்களை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டுசெல்வதற்கு தடைகளையும் ஏற்படுத்திவருகின்றனர்.

ஆயுதப்படைத்தரப்பின் இத்தகைய நடவடிக்கைகள் யுத்தநிறுத்த மீறல்களுக்கு ஒப்பான செயற்பாடாகும். அதாவது யுத்தநிறுத்த உடன்பாட்டின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகிய இயல்புவாழ்க்கையைத் தோற்றுவித்தலென்ற நோக்கத்திற்கு எதிரானதாகும்.

படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் யுத்த நிறுத்த விதிகளுக்கு மாறானதென விடுதலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## விசேட அதிரடிப்படையினரால் போராளியொருவர் கைது

### -கொக்கட்டிச்சோலையில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மண்முனை கொக்கட்டிச்சோலை வாவி வழியாக பயணம் செய்த தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரை நேற்று முன்தினம் மாலை சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலை மிதக்கும் பாதையில் மண்முனை இறங்கு துறையில் இவரது உடமைகள் விசேட அதிரடிப்படையினரால் சோதனையிடப்பட்டபோது சயனைட் கண்டுபிடிக்கப்பட்டதாக காத்தான்குடி சிறிலங்காப்பொலிசார் தெரிவித்துள்ளனர். சண்முகராசா தயானந்தராசா (கவிராஜ்) என்ற குறிப்பிட்ட போராளி நேற்று முன்தினம் மட்டக்களப்பு மேலதிக நீதிபதி எம்.எல் எம்.அஜ்மீர் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இவரை மூன்று நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## பொதுக்கட்டமைப்பின் தொடக்கம் இடைக்கால தன்னாட்சிக்கான படி!

### - ஊடக மாநாட்டில் ஜே.வி.பி தலைவர்

பொதுக்கட்டமைப்பு செயற்படத் தொடங்கினால் அது இடைக்கால தன்னாட்சிக்கான படியாகும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது. கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் அடுத்தகட்ட யுத்தத்துக்கான தயார்ப்படுத்தலை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

போர் நிறுத்த உடன்பாடு அமுலில் இருக்குமானால் பொலிஸ் அதிகாரி ஜெயரட்ணத்தை கடத்திச் சென்றிருக்க முடியாது.இந்த நிலையில் ஆழிப் பேரலையின் பின்னர் சர்வதேச உதவியை பயங்கரவாத அமைப்பிடம் வழங்கு வதற்கு அரசாங்கத்திற்கு மக்கள் அதிகாரம் வழங்கவில்லை என்றும் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார். (32)

## ஆனையிறவில் நாளை வெற்றிவிழா

(அலுவலக செய்தியாளர்)

ஆனையிறவு மீட்பும்,தீச்சுவாலை முறியடிப்பும் வெற்றிவிழா நிகழ்வுகள் நாளை காலை 10.00 மணிக்கு வெகு விமரிசையாக நடைபெற வுள்ளது.

மீட்கப்பட்ட ஆனையிறவு மண்ணில் மேற்படி நிகழ்வு நடைபெறவுள்ளது இவ்விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் விழா ஏற்பாட்டுக்குழுவினர்வேண்டியுள்ளனர். (சோ)

## தந்தை செல்வா நினைவாக குடாநாட்டில் நேற்று நிகழ்வுகள்

(நமதுநிருபர்)



தந்தைசெல்வாவின் 28 ஆம் ஆண்டு நினைவு விழா தந்தைசெல்வா நினைவுச் சதுக்கத்தில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்.நூலகத்திற்கு அருகிலுள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் நடைபெற்ற நிகழ்வு தந்தை செல்வா அறக்கட்டளையின் செயலாளர் வணபிதா ஜெபநேசன் அடிகளார் தலைமையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மேல்மாகாண ஆளுநருக்கு எதிராக ஐ.தே.க. நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

### – மாகாணசபை ஒத்திவைப்புக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

மேல் மாகாணசபையை ஒத்திவைத்துள்ள ஆளுநருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வரப்போவதாக ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது. மேல்மாகாண சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினர்கள் மாகாணசபையை ஒத்திவைப்பது தொடர்பாக ஆளுநர் எடுத்த முடிவு மிகவும் அசாதாரணமானது எனத் தெரிவித்துள்ளனர். இதனால் ஆளுநர் அலவி மௌலானாவுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாகவும் மாகாணசபையை ஒத்திவைப்பது சட்டத்திற்கு முரணானது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக்கட்சியின் மாகாணசபை உறுப்பினரும் எதிர்க் கட்சியின் பிரதான அமைப்பாளருமான லக்ஷ்மன் அபயகுணவர்த்தன. மாகாணசபைக் கூட்டத்தை ஒத்திவைப்பதற்கு ஆளுநருக்கு அதிகாரம் இல்லை. மாகாணசபைக் கூட்டத்தொடரை

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆழிப்பேரலை உதவி கணக்கு விபரங்களை பாராளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டும்!

### சர்வதேசத்தின் உதவியையும் ஐ.தே.க. கோருகின்றது

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் வெளிநாட்டு உதவிகளாக சிறிலங்கா அரக்குக் கிடைத்த 10,000 கோடி ரூபாவிற்கான கணக்கு விபரங்களை உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் வெளிநாட்டு உதவியாக 15,000 கோடி ரூபாவைக் கேட்டிருந்ததாகவும், அதில் 10,000 கோடி ரூபா அரசாங்கத்திற்குக் கிடைத்திருப்பதனை இராஜதந்திர வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் கூற்றின்படி கிடைத்திருக்கும் பெருமளவு உதவித்தொகைகள் சனாதிபதி நிதியத்திற்கும் பிரதமர் அலுவலகத்தினால் ஆரம்பிக் கப்பட்ட கணக்கிற்குமே அனுப்பப் பட்டுள்ளன. 10,000 கோடி ரூபா கிடைத்த போதிலும் ஆழிப் பேரலையினால் இடம்பெயர்ந் துள்ள மக்களுக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## படைய தொடக்க பயிற்சிக்கல்லூரியின் பத்தாம் ஆண்டு நிறைவு நிகழ்வு

### -விளையாட்டு போட்டிகள் நேற்று ஆரம்பம்



படைய தொடக்க பயிற்சிக் கல்லூரியின் பத்தாம் ஆண்டு நிறைவினையொட்டி விளையாட்டுப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகின.

ஆரம்ப நிகழ்வாக ஆண், பெண் போராளிகளுக்கிடையேயான வீதியோட்டப் (மரதனோட்டம்) போட்டி இடம் பெற்றது. போட்டியில் கலந்துகொண்ட போராளிகளை படைய தொடக்கப் பயிற்சி கல்லூரியின் சிறப்புத் தளபதி ஆதவன் கைலாகு கொடுத்து உற்சாகப் படுத்தியதைத் தொடர்ந்து காலை 6.00 மணிக்கு முல்லை.புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியிலிருந்து பெண் போராளிகளுக்கான போட்டியை சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா ஆரம்பித்து வைக்க அதேநேரம் ஆண் போராளிகளுக்கான வீதியோட்டப் போட்டியை நிதித்துறைப் பொறுப்பாளர் பாலதாஸ் ஆரம்பித்து வைத்தார். போட்டி முடிவிடம் விசுவமடு நகர்பகுதியில் அமையப்பெற்றது.ஆண் போராளிகள் வரிசையில் யாழ்நேயன் முதலாமிடத் தையும், சுமன் இரண்டாமிடத்தையும், பெற்றுக்கொள்ள பெண்போராளிகள் மூவர் சம நேரத்தில் முடிவிடத்தைக் கடந்து முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.இப்போட்டியில் ஆண்கள் 20 பேரும் பெண்கள் 20 பேரும் கலந்து கொண்டு அனைவரும் மரதன் ஓட்டத்தை ஓடிமுடித்தமை குறிப்பிடத்தக்கது. (கா)

# வரிவிளம்பரம்


## சீமெந்துக் கல் விற்பனைக்கு உண்டு

எம்மிடம் தரமான சீமெந்து மணல் கலவையில் தரமான முறையில் அறுக்கப்பட்ட சீமெந்து கல் விற்பனைக்கு உண்டு. அளவு-4x6x12. தொடர்புகளுக்கு தமிழ்கடல், கட்டட பொருள் வாணிபம்,155 யாழ்சாலை கிளிநொச்சி. (5917)

## வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரத்தில் அழககம் (சலூன்)ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. வேலை தெரிந்தவர்களும், வேலை பழக விரும்புபவர்களும் வரலாம். சம்பளம் பேசித்தீர்மானிக் கப்படும் தொடர்புகளுக்கு:- "பொதிகை அழககம்" கனகபுரம் தெரு, கிளி நொச்சி. (6072)

## வகுப்புக்கள் ஆரம்பம்

கிளி.புனிததிரேசா பெண்கள் கல்லூரியில் 2007 ஆம் ஆண்டுக் கான கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான வகுப்புக்கள் 29.04.2005 வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப் படவுள்ளதால் கற்க விரும்பும் மாணவர்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகவல்:- அதிபர், கிளி.புனிததிரேசா பெண்கள் கல்லூரி. (6081)

2007 A/Lகலை, வர்த்தக பிரிவு வகுப்புக்கள்நடைபெறும் நேரசூசி

| | | |
|---|---|---|
| தமிழ் வகுப்பு:-சனி, ஞாயிறு<br>திரு.ரமேஸ் | 10-11,(3-4) | 8-9 |
| புவியியல் வகுப்பு-திங்கள்,புதன்<br>திரு.ஸ்ரீஸ்குமார் | 4-5, | 4-5 |
| இந்துநாகரிகம் வகுப்பு-புதன், ஞாயிறு<br>திரு.சிவஞானம் | 5-6 | 9-11 |
| கணக்கீடு வகுப்பு-திங்கள்<br>திரு.சிவப்பிரகாஸ் | | 4-5 |
| வணிகக்கல்வி வகுப்பு சனி,ஞாயிறு<br>திரு.அகிலன் | 5-6 , | 8-9 |
| பொருளியல்வகுப்பு-திங்கள்,வெள்ளி<br>திரு.சாந்தன் | 4-5 , | 4-5 |

இடம்:-கேம்பிறிஜ் கல்லூரி, நிர்வாகம், உதயநகர் கிளிநொச்சி. (சி.11781)

## காணி விற்பனைக்கு

பரந்தன் முல்லைவீதி, புதுக் குடியிருப்பு தேவிபுரம் சந்தியில் இருந்து 200 மீற்றர் தொலைவில் நல்லபலன் தரும் 2 1/2 ஏக்கர் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு களுக்கு:- (கோடீஸ்வரன் கடை, தேவிபுரச்சந்தி. (5834)

## 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), (சி.11779)

## முட்டைக்கோழி விற்பனைக்கு உண்டு

எம்மிடம் பிறிமாஇன் முட்டை கோழி (சிவப்பு) மூன்று மாதம் நிரம்பிய நிலையில் உள்ளது விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும். தொடர் புகளுக்கு. சுடர் கோழிவளர்ப்பகம், 155 விவேகானந்த நகர் கிளிநொச்சி. (5917)


## இடிதாங்கி அமைக்க நடவடிக்கை

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் இடி தாங்கி அமைப்பதற்கு அனிஞ்சியன் குளம் வாணி விளையாட்டுக் கழகம் முன்வந்துள்ளது.

இப்பிரதேசத்தில் மழைநேரங்களில் மின்னல்தாக்கி உயிரிழப்புக்களும், எரி காயங்களும் ஏற்பட்டு வருகின்றன. இதனையடுத்து இனிவரும் காலங்களில் இவ்வாறான அனர்த் தத்தை தடுப்பதற்காக வாணி விளை யாட்டுக்கழகம் இந்த இடிதாங்கியை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் மூலம் எட்டு கிலோமீற்றர் பிரதே சத்தை மின்னல் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க முடியுமெனத் தெரிவிக்கப் படுகிறது. (24)

# வவுனியாவில் விவசாயத்தை மேம்படுத்த பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை

(வவுனியா)


வவுனியா மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற சங்கம நிகழ்வில் அப்பகுதி விவசாயத்தினை மேம்படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 11.00 மணியளவில் வவுனியா மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுநிறுவனப் பொறுப்பாளர் தலைமையில் இந்தசங்கம நிகழ்வு நடை பெற்றது. இந்நிகழ்வின் போது வவுனியா மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் அலை பொதுச் சுடரினை ஏற்றிவைக்க, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சின்னன்ணன் தமிழீழதேசியக் கொடியினை ஏற்றிவைத்தார். ஈகச் சுடரினை முல்லை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ஏற்றினார்.

இந்நிகழ்வில் 2003,2004 ஆம் ஆண்டுகளுக்கான செயற்திட்டங்கள் முடிவுற்ற நிலையில் 2005 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டத்தில் சகல கமக்கார அமைப்புக்களும் ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதோடு கமக்கார அமைப்பைச் சேர்ந்தவர்ளுக்கு ஏற்பட்ட இடையூறுகள் சம்பந்தமாக ஆராயப்பட்டது. இக்கலந்துரையாடலில் குழுவேலை சம்பந்தமாகவும், நன்னீர், மீன்பிடி சம்பந்தமாகவும், பயிர்செய்கை சம்பந்தமாகவும். வனவளம்சம்பந்தமாகவும், உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்வது சம்பந்தமாகவும் மேச்சல் தரவைகளை இனங்கண்டு புல் உற்பத்தி செய்வது சம்பந்தமாகவும், கிராமிய அபிவிருத்தி வங்கிமூலம் நெல் அரிவு வெட்டும் இயந்திரம் கடன் அடிப்படையில் வழங்கல் சம்பந்தமாக ஆராயப்பட்டது.

இச் சங்கம நிகழ்வில் உதவி விவசாயப் பணிப்பாளர் கமநல அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பொறி யியலாளர்கள்,வவுனியா மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் அலை,தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் மற்றும் வவுனியா மாவட்ட கமக்கார அமைப்புக்கள், இணைப்பாளர்கள், போராளிகள் கலந்துகொண்டனர்.



# முல்லை மாவட்டத்தில் சிறுவர்களுக்கு விற்றமின் 'ஏ' வழங்கும் நிலையங்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் பணி மனை பகுதிக்குட்பட்ட முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையினரால் ஆறு மாதம் தொடக்கம் ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களில் கடந்த தை,மாசி, பங்குனி ஆகிய மாதங்களில் விற்றமின் 'ஏ'உயிர்ச்சத்து பெறாதவர்களுக்கு எதிர்வரும் சனிக் கிழமை காலை 8.00 மணியிலிருந்து பி.ப 4.00 மணிவரை பின்வரும் விசேட நிலையங்களில் விற்றமின் 'ஏ' வழங்கப்படவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட குழந்தை களுக்கு விற்றமின் 'ஏ' ஐ பெற்றுக் கொள்ளுமாறு முல்லை மாவட்ட சுகாதார சேவைபிரதிப்பணிப்பாளர் அறி வித்துள்ளார்.

விசுவமடு மேற்கு ஆரம்ப சுகாதார நிலையம், தொட்டியடி முன்பள்ளி, தேராவில் மதுஷா குடியிருப்பு, விசு வமடு பாரதிவித்தியாலயம், சோழர் இல்லம் விசுவமடு கிழக்கு, உடையார் கட்டு தெற்குகுரவில் பாடசாலை, மூங்கிலாறு ஆரம்பசுகாதார நிலையம்,

உடையார்கட்டு மகாவித் தியாலயம், சுதந்திரபுரம் ஆரம்ப சுகாதாரநிலையம், சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலை, வள்ளிபுனம் ஆரம்ப சுகாதார நிலையம், வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தரவித்தியாலயம்,

இலங்கை செஞ்சிலுவைச்சங்க சிகிச்சைநிலையம் தேவிபுரம் கொலனி, கைவேலி ஆரம்ப சுகாதார நிலையம்,வேணாவில் ஸ்ரீமுருகானந்தா பாடசாலை, அன்பு முன்பள்ளி புதுக் குடியிருப்பு, றோமன் கத்தோலிக்க பாடசாலை.புதுக்குடியிருப்பு,

கியூடெக் முன்பள்ளி,மந்துவில் அரசரட்ணம் பாடசாலை, கிராமிய வைத்தியசாலை புதுக்குடியிருப்பு, ஆரம்ப சுகாதாரநிலையம். 7 ஆம் வட்டாரம், கோம்பாவில் விக்னேஸ்வரா பாடசாலை,

ஆனந்தபுரம் கிராமசேவையாளர் அலுவலகம், இரணைப்பாலை ஆரம்ப சுகாதார நிலையம், அம்பலவன் பொக் கணை ஆரம்பசுகாதாரநிலையம், வட்டுவாகல் பொதுமண்டபம், கரைச்சிக்குடியிருப்பு நலன்புரி நிலையம்,மாவட்ட வைத்தியசாலை முல்லைத்தீவு, வலைஞன்மடன் அ.த.க பாடசாலை, முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க. பாடசாலை, பனையடி நலன்புரி நிலையம், உன்னாப்புலவு நலன்புரிநிலையம், சிலாவத்தை தமிழ்வித்தியாலயம், சவக்காலையடி, உடுப்புக்குளம் பொதுமண்டபம், அளம்பில் ஆரம்ப சுகாதார நிலையம், அளம்பில் நலன்புரி நிலையம்,(ராமசாமி தோட்டம்),

இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் சிகிச்சை நிலையம் செம்மலை, நாயாறு நலன்புரிநிலையம், குமுழமுனை ஆரம்ப சுகாதார நிலையம்,வில்வம் முன்பள்ளி குமுழமுனை, ஆறு முகத்தான் குளம் அ.த.க பாடசாலை, தண்ணீரூற்று ஆரம்பசுகாதார நிலையம்,

முறிப்பு பொதுமண்டபம், மாமூலை ஆரம்ப சுகாதார நிலையம், பூதன்வயல் பொதுமண்டபம்,ம.ம.ம மனை முள்ளியவளை,பொன்னகர் முன்பள்ளி,முள்ளியவளை கிழக்கு பொதுமண்டபம்,ஆ.சு.நிலையம் வற்றாப்பளை,கேப்பாபிலவு பாடசாலை,

ஒட்டுசுட்டான் மருத்துவமாது விடுதி,ஒட்டுசுட்டான்சின்னத்தம்பி பாடசாலை, முத்தையன் கட்டு இடது கரை ஆ.சு.நிலையம், மன்னாகண்டல் இலங்கைசெஞ்சிலுவைச்சங்க சிகிச்சை நிலையம், முத்தையன்கட்டு வலதுகரை முன்பள்ளி, கச்சிலைமடு அ.த.க பாடசாலை,

நாச்சிக்குடா [illegible]நபன் முன்பள்ளி, திருமுறிகண்டி [illegible] சு. நிலையம்,இந்து முன்பள்ளி தி[illegible] முறிகண்டி, பனிக்கன்குளம் பொது மண்டபம், மாங்குளம் திலீபன் மருத்து வமனை ,ஒலுமடு பொதுமண்டபம், கரிப் பட்டமுறிப்பு ஆ.சு நிலையம், அம்ப காமம் பொதுமண்டபம், பெரிய புளியங்குளம் அ.த.கபாடசாலை, தண்டுவான் சிகிச்சைநிலையம், ஒதியமலை முன்பள்ளி, ஆ.சு. நிலையம் கூழாமுறிப்பு, இலங்கை செஞ்சிலுவைச்சங்க சிகிச்சை நிலையம் கருவேலன் கண்டல்.

ஆகிய இடங்களிலேயே சிறுவர் களுக்கான விற்றமின் 'ஏ' வழங்கப் படவுள்ளன. (ஆ)


# கண்ணீர் அஞ்சலிகள்

## டாக்டர் பரமு-கிருஸ்ணபிள்ளை

மாவட்டவைத்தியசாலை,

முல்லைத்தீவு.



தனது இறுதி மூச்சுவரை மக்கள் பணியில் தன்னை இணைத்துக்கொண்டு அரும்பணியாற்றி எம்மைப் பிரிந்து மீளாத்துயில் கொண்ட எமது டாக்டருக்கு எம் கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம்சாந்தி!

வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
கிராமிய வைத்தியசாலை-புதுக்குடியிருப்பு,
மாவட்ட வைத்தியசாலை-முல்லைத்தீவு.

(5837)

# கண்ணீர் அஞ்சலி

## பரமு-கிருஷ்ணபிள்ளை

(பதிவுவைத்திய அதிகாரி)

முல்லைத்தீவு சுகாதார திணைக்களத்தின் கீழ், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் கடந்த 1996 ஆம் ஆண்டு தொடக்கம் கடமையாற்றி 21.04.2005 அன்று காலமாகிய பதிவு வைத்திய அதிகாரி பரமு-கிருஷ்ணபிள்ளை அவர்களின்ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத் தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர்,
பணியாளர்கள்,
மா.சு.சே.பி.ப.பணிமனை,
முல்லைத்தீவு.

(5838)

# சிறைக்கைதிகளின் எண்ணிக்கை அமெரிக்காவில் அதிகரிப்பு

(வோஷிங்டன்)

**அமெரிக்காவில் சிறைக் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அந்நாட்டு நீதித்துறை அறிவித்துள்ளது.**

அமெரிக்காவில் சிறையில் இருக்கும் கைதிகளின் எண்ணிக்கை 21 இலட்சத்து 31 ஆயிரத்து 180. கடந்த 2003 ஆம் ஆண்டை விட இம் முறை 2.3 சதவீத கைதிகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அரசு ஒரு இலட்சம் பேருக்கு 726 பேர் என்ற வீதத் தில் சிறையில் அடைத்துள்ளது. இங்கிலாந்தில் ஒரு லட்சம் பேருக்கு 142 பேரும், பிரான்சில் 91 பேரும், ஜப்பானில் 58 பேரும் சிறையில் அடைக்கப்படுகின்றனர். அமெரிக்காவில் கறுப்பர்கள் 12.6 சதவீதமும் கறுப்பர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர் வெள்ளை இனத்த வர்கள் 1.7 சதவீதம் பேர் சிறையில் அடைக் கப்படுகின்றனர். இதர பிரிவினர் 3.6 சதவீதம் பேர் சிறையில் அடைக்கப்படுகின்றனர் இதே வேளை அமெரிக்காவில் வன்முறை அளவு 94 ஆம் ஆண்டில் இருந்து 2003 ஆம் ஆண்டு வரை 33 சதவீதம் குறைந்துள்ளது சொத்து தொடர்பான குற்றங்கள் 23 சதவீதம் குறைந்துள்ளது சிறைகளில் கைதிகளின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே இருக்கிறது ஆண்டுக்கு சராசரியாக 3.5 சதவீதம் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. விடுவிக்கப்படும் கைதிகளில் மூன்றில் இரண்டு பங்கினர் மூன்று ஆண்டு களுக்குள் மீண்டும் சிறைக்கு வந்து விடு கின்றனர்.

ஒரு கைதியை சிறையில் வைத்திருக்க ஆண்டுக்கு 9 இலட்சத்து 90 ஆயிரம் இந்திய ரூபாய் செலவாகிறது சிறைச்சாலைகள் மற்றும் சிறை தொடர்பான செலவுகளுக்காக அமெரிக்கா ஆண்டுக்கு இரண்டு இலட்சத்து 56 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவு செய்கிறது. 12 ஆயிரம் பெண்கள் சிறையில் உள்ளனர் பெண் கைதி களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 2.9 சதவீதம் உயாந்து வருகிறது இரண்டு இலட்சத்து 83 ஆயிரம் மனநிலை பாதிக்கப் பட்டவர்களும் 92 ஆயிரம் வெளிநாட்டவர்களும் அமெரிக்க சிறைகளில் இருந்து வருகின்றனர். இவ்வாறு புள்ளிவிவரங்களில் கூறப்பட்டுள்ளது.

# உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டது தொடர்பில் ஈராக்கில் பத்து தீவிரவாதிகள் கைது

(பாக்தாத்)

ஈராக்கில் உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தியது தொடர்பாக 10 தீவிரவாதிகள்கைது செய்யப்பட்டுள்ளனர்.

முதலில் ஆறு பேரும், அதைத் தொடர்ந்து நாலு பேரும் கைது செய்யப்பட்டதாக பாக்தாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வியாழக்கிழமை பல் கேரிய கம்பெனிக்குச் சொந்தமான உலங்குவானூர்தியை தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தினர் இதில் 11 பேர் பலியானார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உள்ளூர் மக்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து முதலில் ஆறு ஈராக்கியர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அவர்களிடம் நடத்திய விசாரணைக்குப் பின் மேலும் நாலு பேர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# திருமணம் செய்ய மறுத்தார் உறவினரால் பெண் படுகொலை

இங்கிலாந்தின் தலைநகர் லண்டனிலுள்ள வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பணியாற்றி வந்த 25 வயது முஸ்லிம்பெண் கழுத்தை அறுத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார். அந்தப் பெண்ணை பாகிஸ்தானைச் சேர்ந்த வாலிபர் ஒருவருக்கு திருமணம் செய்து வைக்க அவரது உறவினர்கள் ஏற்பாடு செய்து வந்தனர். ஆனால் அந்த வாலிபரை திருமணம் செய்ய அந்தப் பெண் மறுத்ததினாலேயே இந்தக் கோரச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பெண்ணின் உறவினர்களே பெண்ணின் கழுத்தை அறுத்து அவரைக் கொலை செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக லண்டன் பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



சியோலில் சமயா சமய ஊழியர்களுக்கும் அதிகரித்த பாதுகாப்பு வேண்டும் எனக் கோரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளும் தொழிற்சங்க ஊழியர்கள்.

# எவரெஸ்ட் சிகரத்தில் 615 தொன் குப்பை; அகற்றுவதற்கு சீனா திட்டம்

(பீஜிங்)

உலகில் அதி உயரமான எவரெஸ்ட் சிகரத்தை சுத்தம் செய்ய சீனா திட்டமிட்டுள்ளது.

இமயமலையின் எவரெஸ்ட் சிகரத்தில்ஏறிய குழுவினரும், சுற்றுலாப் பயணிகளும் 1921 ஆம் ஆண்டு முதல் விட்டுச் சென்ற குப்பைகள் அளவு 615 தொன் ஆகும் அவற்றில் விஷத்தன்மை வாய்ந்தவையும் உள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.இமயமலையின் சீனப்பகுதியில் உள்ள குப்பைகளை அகற்றுவதற்கு சீன மலையேறும் குழு திட்டமிட்டு உள்ளது இதற்காக இந்தக்குழு வார இறுதியில எவரெஸ்ட் சிகரத்தில் ஏற இருக்கிறதாம்.

1990 களின் மத்தியிலிருந்து பல்வேறு குழுக்கள் 10 தொன் குப்பைகளை அகற்றி உள்ளன.

29 ஆயிரம் அடி உயரம் உள்ள எவரெஸ்ட் சிகரத்தில் இது வரை 1,500 இற்கும் மேற்பட்டவர்கள் ஏறி உள்ளனர். 185 பேர் இந்த முயற்சியில் பலியாகியுள்ளனர்.



மோசூலுக்கு அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட 155 மி.மீற்றர் எறிகணையை குழி ஒன்றினுள் போட்டு அழிக்கும் அமெரிக்க இராணுவத்தினர்.

# பரசூட்டிலிருந்து குதித்த ஒளிப்பதிவாளர் பரிதாப மரணம்

(புளோரிடா)

அமெரிக்காவில் பரசூட் அணிந்து விமானத்தில் இருந்து குதித்த சினிமா ஒளிப்பதிவாளர் ஆல்பர்ட் கஸ் விங் விமானத்தின் இறக்கைகள் வெட்டியதால் உயிரிழந்தார். விமானத்தில் இருந்து குதித்தபோது இடது பக்க இறக்கை அவர் மீது மோதியது இரு கால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் விமான நிலையத்தில் அவர் குதித்தார் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் அங்கு மரணமனார்.பரசூட் அணிந்து விமானத்தில் இருந்து குதிக்கும் நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது

# குரங்கு முன் புகைப்பிடிக்க தடைவிதிப்பு



தென்னாபிரிக்காவின் புளோபான்டம் மிருகக் காட்சி சாலையில் உள்ள சார்லி என்ற மனித குரங்கு சிகரெட் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டதால் பார்வையாளர்கள் புகைப்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பார்வையாளர்கள் சிகரெட் பிடிப்பதை பார்த்ததாகவும்அவர்கள் குடித்து விட்டு எறியும் சிகரெட்டை எடுத்து விளையாட்டாக புகைத்துப் பார்த்ததாலும் இந்த பழக்கத்திற்கு அடிமையாகி விட்டது. புகைப்பழக்கத்தை கைவிட அந்த மனித குரங்குக்கும் ஊழியர்களும் டாக்டர்களும் சிகிச்சை அளித்தும் பலனில்லை.

வேறு வழி இல்லாததால் அந்த மிருகக்காட்சி சாலைக்கு வரும் பார்வையாளர்கள் புகை பிடிக்கக்கூடாது என்று நிர்வாகம் தடை உத்தரவு பிறப்பித்து இருக்கிறது.

# நிதிபெற்றதில் முறைகேடு செக்.பிரதமர் பதவி விலகினார்

(பிரேக்)



தனது ஆடம்பர மாளிகைக்கு நிதி பெற்றதில் முறைகேடு செய்ததாக செக்கோஸ்லோவேகியா பிரதமர் ஸ்டானிஸ்லாவ் கிராஸ் மீது குற்றச்சாட்டு எழுந்ததைத் தொடர்ந்து அவர் பதவி விலகியுள்ளார்.

அவரது பதவி விலகல் கடிதத்தை அதிபர் வாக்லாவ் ஏற்றுக்கொண்டுள்ளார். செக்கோஸ்லோவேகியாவின் சட்டப்படி பிரதமர் பதவி விலகியதும் தானாகவே அமைச்சரவை கலைந்துவிடும்.

## சீனாவில் 21 பேர் பலி


சீனாவில் இரசாயன ஆலை ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 21 பேர் உயிரிழந்துள்ளனர். 16 பேர் காயமடைந்துள்ளனர். மின்னல் தாக்கியதிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# லட்சக்கணக்கான ஜேர்மனியர்களுக்கு ஆசி வழங்கிய புதிய போப்பாண்டவர்

(வத்திக்கான்)

தான் பதவியேற்கும் நிகழ்ச்சியைக்காண வத்திக்கான் நகருக்கு வந்த ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஜேர்மனியர்களை புதிய போப் பாண்டவர் பதினாறாவது பெனடிக்ட் திங்கட்கிழமை சந்தித்து ஆசி வழங்கினார்.

யூதர்கள் ஆங்கிளிக்கன் திருச்சபை தலைவர்கள் உள்ளிட்ட கத்தோலிக்க சிந்தனைக்கு மாற்றுக் கருத்து உள்ளவர்களையும் சந்தித்துப் பேசினார்.



போப்பாண்டவராகப் பதவியில் இருக்கும் காலத்தில் தன்னுடைய கருத்துகளை மற்றவர்கள் மீது திணிக்கும் போதகராக இல்லாமல் மற்றவர்களின் கருத்துளைக் காது கொடுத்து கேட்பவராக இருக்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்

## முதல் பயணத்தை மேற்கொண்டார்

புதிய போப்பாண்டவராக 16 ஆம் பெனடிக்ட் கடந்த 24 ஆம் திகதி முறைப்படி வத்திக்கான் நகரில் பொறுப்பு ஏற்றுக் கொண்டார் புதிய போப்பாண்டவராக அவர் தேர்ந்தொடுக்கப்பட்ட பின் அவர் முதல் முறையாக வத்திக்கான் நகருக்கு வெளியே நேற்று சுற்றுப்பயணம் செய்தார் ரோம் நகரை ஒட்டியுள்ள செயின்ட் பால் தேவாலயத்திற்கு சென்று அவர் பிரார்த்தனை நடத்தினார் அந்த தேவாலயத்தை அவர் சுற்றிப்பார்த்தார்.

விரைவில்அவர் வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறார் ஆனாலும் மறைந்த போப்பாண்டவர் ஜோன்போல் அளவுக்கு சுற்றுப்பயணம் இருக்காது என்றும் போப் பெனடிக்ட் தெரிவித்துள்ளார்.



29 வருட சேவையை முடித்து லெபனானை விட்டு இறுதியாக விலகும் சிரிய இராணுவத்தினர்.

# இரணைமடுக் குளத்தை புனரமைக்க மூவாயிரம் மில்லியன்ரூபா தேவை!

-கிளி.நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் வினோதராஜா

**கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாரிய நீர்த் தேக்கக் குளமாகிய இரணைமடுக குளத்தை புனரமைப்புச் செய்வதற்கு 3000 மில்லியன் ரூபா தேவைப் படுவதாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்களப் பொறியியலாளர் வினோதராஜா தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாண பொதுசனநூலகத்தில் இடம்பெற்ற இரணைமடுக் குளத்து நீரை யாழ். குடாநாட்டை நோக்கி திசை திருப்புவது சம்பந்தமான கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே இதனை அவர் தெரிவித்தார்.

இரணைமடுக்குளமானது 106 ஏக்கர் கன அடி தண்ணீரைச் சேமித்து வைக்கக்கூடிய கொள்ளளவை உடையது. எனினும் இது காலத்துக்குக்காலம் புனரமைப்புச்செய்யப்படாதிருப்பதனால் திட்டமிடப்பட்ட அளவு நீரை இக்குளத்தில் சேமித்து வைக்கமுடியாத நிலை உள்ளது.

இதனை விட கால்வாய்கள், மதகுகள் புனரமைப்புக்கள் சிறந்த முறையில்இடம்பெறாததினால் இக் குளத்தை அடிப்படையாகக் கொண்ட நீர் விநியோக நடவடிக்கைகளில் பெருமளவு நீர் விரயமாக்கப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு நோக்கின் இரணைமடுக்குளம் புனரமைக்கப்பட்டு நீர் விரயம் தடுக்கப்படும் வரை இரணைமடுக்குள நீரை யாழ்ப் பாணத்திற்கு விநியோகிப்பது சாத்தியமாகாது என அவர் மேலும் தெரிவித்தார். (33)

## கலந்துரையாடல்

முல்லை. வலய தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகத்தேர்வு தொடர்பான அவசரகலந்துரை யாடல் இன்று காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெறவுள்ளதால் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு முல்லை.வலய தொண்டர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (20)

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவால் பாடசாலை மட்டத்தில் முதலுதவிப்பயிற்சி

(அலுவலக செய்தியாளர்)

வன்னி மாவட்ட சென்ஜோன்ஸ் அன்புலன்ஸ் படைப்பிரிவினரால் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்படும் பயிற்சித்திட்டத்தில் முதலுதவிச் சேவை பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் 2005 ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் 60இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு மூன்று நாள் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தி முடிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக 2005 வைகாசி மாதத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரி, முரசு மோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம் என்பவற்றில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் மனித வள மேம்பாட்டுப்பகுதியுடன் இணைந்து நலன் பேணல் அலுவலர்களை உருவாக்கும் பயிற்சி நெறியை ஆரம்பித்து தொடர்ச்சியாக சென்ஜோன்ஸ் அன்புலன்ஸ் படைப்பிரிவானது நடாத்தி வருகின்றது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் குழந்தைகளுக்கான ஒரு தொகுதி உடைகளையும் அன்பளிப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

-உலக தொழிலாளர் ஸ்தாபன நிதியுதவியுடன்

## கால்நடை வளர்ப்பு பற்றி திருமலையில் பயிற்சி வகுப்பு

திருகோணமலை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அனுசரணையுடன் வடக்கு கிழக்கு தொழில்துறை திணைக்களத்தினால் உலக தொழிலாளர் ஸ்தாபன (ஐஎல்.ஓ) நிதியுதவியுடன் மூதூர் பிரதேசத்தில் பட்டாளிபுரம், சந்தோசபுரம் கிராமங்களைச் சேர்ந்த மாவீரர், போராளி குடும்பங்களுக்கும், வறிய குடும்பங்கீளுக்குமாக 42 பயனாளிகளுக்கு இரண்டு நாள் கால் நடை வளர்ப்பு சம்பந்தமான பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

இந்நிகழ்வு தொழிற்துறை திணைக்களப்பணிப்பாளர் விசுவலிங்கம் தலைமையில் நடைபெற்றது. பயிற்சி வகுப்புகளை கால்நடை வைத்தியர் தபோதினி அருந்தவராஜா ஆகியோர் நடாத்தினர். இக்கருத்தரங்கு கடந்த வெள்ளி , சனி ஆகிய இருநாட்களும் நடைபெற்றது. இறுதிநாள் நிகழ்வாக இப்பயனாளிகளுக்கு நல்லின ஆடுகள் மானியமாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் மங்கேஸ் நஜீம தலைமையில் நடைபெற்றது. இதில் தொழில்துறை திணைக்கள பணிப்பாளர் இவிசுவலிங்கம், உலக தொழில் ஸ்தாபன உத்தியோகத்தர், திணைக்கள உத்தியோகத்தர்கள், கால் நடை வைத்தியாகளீ, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணியாளர்கள் மற்றும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

## தமிழீழ கல்விக் கழகத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் கடல் நீரியல்வள கருத்தரங்கு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடல் நீரியல் வள தொழில்நுட்ப கருத்தரங்கு நடாத்த தமிழீழகல்விக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கல்விப் பொதுதராதர சாதாரணதரத்தில் கற்று பாடசாலைகளை விட்டு வெளியேறி கடல் தொழிலை மேற்கொள்ள முயலும் இளம் தலைமுறையினரை தொழில் நிலையில் மேம்படுத்தும் நோக்குடன் இவர்களுக்கு இப்பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

குறிப்பாக கடற்றொழிலை பிரதான தொழிலாகக் கொண்ட கரையோரப் பிரதேசங்களில் கல்வி கற்று வெளியேறியோருக்கே இப் பயிற்சிநெறி நடாத்தப்படவுள்ளது. நவீன கடல் வளதொழில்நுட்பம், கடலீ உணவுபதனிடல், கடல் நீரியல் முகாமைத்துவம், நீரியல் வளஉற்பத்தியில் வடக்கு கிழக்குமாகாணம், தமிழர் தாயகத்தின் கடல்வளத்தைப் பாதுகாத்தல்போன்ற பல்வேறுவிடயங்களை உள்ளடக்கியதாக இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இரு நாட்கள் முன்னோடிக் கருத் தரங்காக 50 பேருக்கு நடாத்தப்பட்டு தொடர்ச்சியாக மாவட்டத்தின் அனைத்துக்கரையோரப் பிரதேசங்களிலும் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவருக்கும் இக் கருத்தரங்கு நடாத்தப் படவிருப்பதாக மன்னார் மாவட்ட கல்விக்கழக பொறுப்பாளர். ந. ஒளி வளவன் தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட வாராந்த சந்தையில் விவசாயி ஒருவரிடமிருந்து வாழைக் குலையை கிளிநொச்சி கரைச்சிப பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் வாங்கு வதை படத்தில் காணலாம். (படம் - வதனன்)



கிளிநொச்சி வாராந்த சந்தை திறப்பு விழா வின் போது கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர். (படம் - வதனன்)

## சாரதி நியமனத்திற்கான செயன் முறைப் பரீட்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிமாவட்ட செயலகத்தால் நடாத்தப்பட்ட சாரதிநியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை பெறுபேற்றின் படி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள ஓட்டுநர்களுக்கான செயன் முறைப் பரீட்சைக்குத் தோற்று வதற்கு ஏற்ற வகையில் காலை 8.30 மணிக்கு மாவட்ட செயலகத்திற்கு வருகை தருமாறு கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார்.

இராமன்உதய கிரிபாலா-இரத்தினபுரம், முருகேசு சுரேந்தர்-திருவையாறு, லோகநாதன் ஜெகநாதன்-திருவையாறு, தில்லையம்பலம் முகுந்தன்-பண்ணை, கனகபுரம், செல்லையா கோகிலேஸ்வரன்-கனகபுரம், விஸ்வலிங்கம் ஜீவநாதன்-பரவிப்பாஞ்சான், விநாசித்தம்பி தவராசா-திருவையாறு,நவரத்தினம் சுகந்தன்-மே.பா செல்லத்துரை புதுமுறிப்பு, சின்னையா சந்திரன்-உதயநகர் கிழக்கு,சூரியகுமார் குகதாசன்-ஆனந்தநகர், தம்பிப்பிள்ளை ஐங்கரன், செந்தில்வேலன்-155 ஆம் கட்டை கிளிநொச்சி, அருட்பிரகாசம் சாம்சன்போல்-உருத்திரபுரம், வீரையா சுரேஸ்குமார்-உதயநகர் மேற்கு, பொன்னையா ஜெயநாதன்-கணேசபுரம், பரமானந்தம் சுகிர்தன்-திருநகர், கந்தசாமி ஜெயச்சந்திரன்-இரத்தினபுரம், சேதுபதி ரகுபதி-உருத்திரபுரம், பன்னீர்ச் செல்வம் பாலரூபன்-விவேகானந்தநகர், சிவானந்தம் விவேகானந்தன்-இராமநாதபுரம், தர்மலிங்கம் ஜெயசீலன்- ஸ்கந்தபுரம், சின்னத்தம்பி விக்னேஸ்வரன்-ஸ்கந்தபுரம், யாக்கோப்பு நிர்மலன்-அக்கராயன்குளம், சூரியகுமார் கமலதாசன் அக்கராயன் ஆகியோரே அழைக்கப்பட்டுள்ளனர். (சோ)

## 3ஆம் கட்டமாக வீடுகள் நிர்மாணம் செய்வது குறித்து சமூக வலுவூட்டாளர்களுக்கான செயலமர்வு

(திருகோணமலை)

வடக்குகிழக்கு மாகாணத்தில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மூன்றாம் கட்டமாக வீடுகள் நிர்மாணம் செய்வது தொடர்பாக மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பணிபுரியும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூக வலுவூட்டாளர்களுக்கான மூன்று நாள் செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலை சுபலட்சுமி திருமண மண்டபத்தில் ஆரம்பமானது. "மீள் நிர்மாண வேலைத்திட்டத்தின் கீழ், உருவாகும் கிராமம் எவ்வாறு இருக்கும் என்ற கற்பனையில் மூழ்காமல் இவ்வாறாகத்தான் அமைக்கப்படவேண்டும் என்ற இலக்குடன் சமூக வலுவூட்டாளர்கள் தரவுகளைத் திரட்டிச் செயல்படவேண்டும்" என்று தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சமூக வலுவூட்டல் பிரிவு பணிப்பாளர் இ.ம.செல்வராஜா தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பொதுச்சுடரை தமிழர் புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்டப்பணிப்பாளர் எஸ். விஜயகுமார் ஏற்றிவைத்தார், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கடற்கோள் வேலைத்திட்டப் பணிப்பாளர் ஆர்.வின்சன்ட், கழகப் பயிற்சித்திட்ட ஆலோசகர் ரஜனிஇக்பால் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திருகோணமலை மாவட்ட பிரமுகர் சி.குமரகுருபரன் ஆகியோரும் பங்கு பற்றினர் கடற்கோளின் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள மூன்றாம் கட்ட பணிகள் மீள் நிர்மாணத்திட்டத்தின் கீழ் நிரந்தரமான வதிவிடங்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதாக அமையப் போகின்றன என்றும பணிப்பாளர் செல்வராஜா தெரிவித்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக கடல்கோள் வேலைத்திட்டப்பணிப்பாளர் வின்சன்ட் கருத்துத்தெரிவிக்கையில்: "யுத்தம், கடல் கோள் ஆகியவற்றினால் எமது மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கரையோரக் கிராமங்கள் கடற்கோளினால் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அச்சமயத்தில் குடிசையில் வாழ்ந்த அம்மக்கள் மீண்டும் அவ்வாறான குடிசைகளில் குடியமர்த்துவதாக மூன்றாம் கட்ட மீள்நிர்மாண வேலைகள் அமைந்து விடக்கூடாது. பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரம் சிறப்பாகவும் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரக்கூடிய தாகவும் வசதிகள் கொண்டதாக மீள்நிர்மாணத்திட்டப்பணி நிறைவேற்றப் படவேண்டும். சமூக வலுவூட்டாளர்களின் பங்களிப்பு இதற்கு அவசியமாகின்றது" என்று தெரிவித்தார். அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பணிபுரியும் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சமூக வலுவூட்டாளர்கள் இச்செயலமர்வுகளில் பங்குபற்றினர்.

## புதிய நிர்வாகம் தெரிவு

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேசத்தில் தொழிற சங்க புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை காலை 10.50 மணிக்கு அரசியல் துறை பாரதி ஒன்று கூடல் மண்டபத்தில் துணுக்காய்ப் பிரதேச தொழிற்சங்க பொறுப்பாளர் பெ.தனம் தலைமையில் இடம் பெற்றது.

தொழிற்சங்க செயற்பாடுகள் குறித்த கருத்துக்களை துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் வழங்கினார். அத்துடன் புதிய நிர்வாகத் தெரிவில் 11 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் செ.நவநீதன், செயலாளர் செ. சியானந்தன், பொருளாளர் தெ.விபுலானந்தன் ஆகியோருடன் ஒன்பது நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு இடம் பெற்றது. இந்நிகழ்வில் அனைத்து தொழிற் சங்கங்களும் கலந்து கொண்டன.(24)

## பொதுக் கூட்டம்

(மன்னார்)

குடும்பநல மேய்ப்பு பணியகத்தின் மாவட்டக் கத்தோலிக்க பொது நிலையத்தினரின் ஆணைக்குழுப் பொதுக் கூட்டம் மேற்படி பணியகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

இதற்கு பணியகத்தின் இயக்குநர் அருட் திரு விக்டர் சூசை தலைமை வகித்தார். இதில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட பொது முதல்வர் அருட்திரு. சேவியர் குரூஸ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். ஆணைக் குழுவின்புதிய தலைவராக உதவிக் கல்விப்பணிப்பாளர் அ.அந்தோனி முத்துவும் செயலாளராக ஆசிரிய ஆலோசகர் திருமதி. பயற்ரதீதீரிஸ்சும் தெரிவு செய்யப்பட்டனர். இக்கூட்டத்தின் முக்கிய தீர்மானமாக நாட்டின் உண்மையான நீதியையும் சமாதானத்தை வலியுறுத்தியும் தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கும் படியும் கோரப்பட்டதுடன் தீர்மானங்கள் பலவும் எடுக்கப்பட்டன. (18)

# கடற்றொழிலை மேம்படுத்துவதற்கான உதவிகளை அரசும், சர்வதேச அமைப்புக்களும் வழங்கவில்லை

-யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சம்மேளன செயலாளர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ்.வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் கடற்றொழில் நடவடிக்கைகளை மீளக்கட்டியெழுப்புவதற்கான உதவிகள் அரசினாலும், சர்வதேச தொண்டரமைப்புக்களாலும் இதுவரையில் வழங்கப் படவில்லையென யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கசமாசங்களின் சம்மேளனச் செயலாளர் க.சூரியகுமார் குற்றம் சாட்டியுள்ளார்.**

சுனாமி ஆழிப்பேரனர்த்தம் காரணமாக வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 14 கடற்கரையோரக் கிராமங்களைச் சேர்ந்த சுமார் 3500 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிக்கு வருகை தரும் சர்வதேச உதவும் அமைப்புக்களின் பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரிகளும் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்த தேவையான உதவிகள் வழங்கப்படுமென உறுதியளித்துச் செல்கின்றனரே தவிர எந்தவிதமான கடற்றொழில் மேம்பாட்டு உதவிகளையும் வழங்குவதில்லை.

இத்தகைய நடவடிக்கைகளால் இப்பகுதிக்கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இப்பகுதி கடற்றொழிலாளர்களுக்கான தொழில் மேம்பாட்டு உதவிகளை வழங்க தொண்டர் அமைப்புக்கள் முன்வரவேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (33)

## வாழ்வியலை சீரமைக்கும் பணியில் தமிழீழ பெண்கள் பண்பாட்டு மையம்

சுனாமி ஆழிப்பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வியலைச் சீரமைத்து அவர்களை மீண்டும் சீரான வாழ்வியல் முறைகளுக்குள் இட்டுச் செல் லும் நடவடிக்கைகளில் தமிழீழ பெண்கள் பண்பாட்டு மையம் ஈடுபட்டு வருகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்ட பெண்களைச் சந்தித்து கலந்துரையாடி அவர்களை இயல்பான சமூக வாழ்விற்கு ஆற்றுப்படுத்தும் நடவடிக்கைகளில் பெண்கள் பண்பாட்டு மையம் ஈடுபட்டு வருகின்றது. (33)

## தொற்றுநோய் அபாயம்

யாழ்.வடமராட்சி கிழக்கிலுள்ள கிராமங்களில் நுளம்புத் தொல்லை அதிகரித்திருப்பதனால் மலேரியா, வாந்திபேதி, டெங்கு, நெருப்புக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது. இப்பகுதியிலுள்ள கிராமங்கள் பலவற்றிலும் நுளம்புப் பெருக்கத்தை தவிர்ப்பதற்கான மருந்து விசிறல் நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாதிருப்பதே இந் நுளம்புப் பெருக்கத்திற்குக் காரணமென மக்கள் தெரிவிக்கின்றனர். (33)

## தென்னைகளுக்கு "மைற்" செய்கையாளர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள தென்னைகளுக்கு 'மைற்' என்ற ஒரு வகை நோய் பரவி வருவதாக தெங்குப் பயிர்ச்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தெங்குப் பயிர்ச்செய்கையில் "மைற்" என்ற இந்நோயின் தாக்கம் அண்மைக் காலமாக அதிகரித்திருப்பதனால் தெங்குப் பயிர்ச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் தெங்குப் பயிர்களின் விளைச்சலிலும் வீழ்ச்சி ஏற்படுவதாக செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (33)

## படைநிலைகளை பலப்படுத்துவதற்கு கிளாலியில் படையினர் மண் அகழ்வு

(தென்மராட்சி)

யாழ்.குடாநாட்டில் நிலை கொண்டுள்ள சிறிலங் காப் படைகள் கிளாலி கடலோரப்பகுதிகளில் இருந்து மண் அகழும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த ஒரு வாரகாலமாக முப்பதுக்கும் மேற்பட்ட பாரவூர்திகள் மூலம் நன்கு சுற்றி மூடப்பட்ட நிலையில் யாழ்குடாநாட்டின் இதர பகுதிகளுக்கு படையினரால் மண் எடுத்து வரப்படுவதாகவும், தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் தொடர்ச்சியாக பனை, தென்னை மரங்கள் இப்பிரதேசங்களில் இருந்து படையினரால் எடுத்துச்செல்லப்பட்ட நிலையில் தற்பொழுது மண் அகழ்வு நடவடிக்கை தீவிரமாக இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (28)

## புனரமைக்கப்படவில்லை

(தீவகம்)

யாழ்.தீவகத்தின் வேலணைப்பகுதியிலுள்ள வீதிகள் பலவும் நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் இப்பகுதியிலுள்ள சகல வீதிகளும் குன்றும் குழியுமாக போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் காணப்படுகின்றது. இது குறித்து வேலணைப் பிரதேச சபையினர் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (33)

## சட்டபூர்வ மணல் விற்பனைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது

-யாழ்.உதவி அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்திற்கு குடத்தனைக் கிராமத்திலிருந்து சட்டபூர்வமாக மணல் அகழ்ந்து விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதென யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

இதன் அலுவலகம் உபயகதிர்காமம், புலோலியிலுள்ளது. மணல் கொள்வனவு செய்வோர் மணலைக் கொண்டு செல்வதற்குரிய வழி அனுமதிப்பத்திரத்தை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபரின் தும்பளை உப அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆனால் பொது மக்கள் சட்டவிரோதமாக தனியார் காணிகளிலும் அனுமதிக்கப்படாத இடங்களிலும் மணல் அகழ்ந்து அதிக விலையில் விற்பனை செய்வோரிடமிருந்து கொள்வனவு செய்கின்றனர் என அரசாங்க அதிபருக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மணல் தேவைப்படும் பொதுமக்கள் நேரடியாக வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்திடமிருந்து தங்களுக்குத் தேவைப்படும் மணலைக் கொள்வனவு செய்ய முடியும். அவ்வாறு மணல் கொள்வனவு செய்வதனால் பொதுமக்கள் நியாயமான விலையில் மணலைப் பெறுவதுடன் அங்கீகாரமின்றி மணல் அகழும் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த உதவலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ் மொழித்தின விழா யூலை-31 இல் நடைபெற ஏற்பாடு

(திருமலை)

வடக்கு -கிழக்கு மாகாண தமிழ்மொழித் தினவிழா 31.07.2005 அன்று நடைபெற விருப்பதாக மாகாணக்கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் அறிவித்துள்ளார். அதற்கு முதல் நாள் மாகாண நிலை தமிழ் மொழித் தினப் போட்டிகள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட மாகாண நிலைகளுக்குரிய எழுத்தாக்கப்போட்டிகள் மே 28 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி கிளிநொச்சி மகாவித்தியாலயம், முல்லைத்தீவு-மாங்குளம் ம.வி மன்னார் அல் அஸ்ஸர் ம.வி வவுனியா தெற்கு சைவப்பிரகாச மகளிர் கல்லூரி திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி, பட்டிருப்பு வின்சன்ட் மகளிர் கல்லூரி, அக்கரைப்பற்று வெஸ்லி கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறும். மாவட்ட நிலை தமிழ்மொழித் தினப்போட்டிகள் 29.05.2005 இல் நடைபெறும். இம்முடிவுகள் கடந்த 9 ஆம் திகதி மாகாணக்கல்வி அமைச்சில் கல்விப் பணிப்பாளர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்டன. (25)

## இந்து ஆலயங்களுக்கு அருகில் புத்தர் கோயில்; உடனடியாக அகற்றுமாறு கோரிக்கை

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள் தெற்கு சிவன் கோயிலுக்கு மிக அருகிலும் நாகர்கோவில் பகுதியில் வைரவர் கோயிலுக்கு அருகிலும் படையினரால் அமைக்கப்பட்டுள்ள புத்தர் கோயிலை உடனடியாக அகற்றுமாறு இடம் பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆலயங்களின் புனிதத் தன்மைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதத்தில் ஆக்கிரமிப்புப் படைகள் ஆலயங்களுக்கு அருகிலேயே புத்தர் கோயிலை நிறுவி இருக்கின்றன. இந்த இந்து ஆலயங்கள் சிதைவடைந்து இருப்பதுடன், புத்தர் கோயில்கள் செழிப்புற்றுக் காணப்படுகின்றன. படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென அச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (28)

## இலவச ஆங்கில வகுப்புக்கள் தென்மராட்சியில் நடத்தப்படும்

(தென்மராட்சி)

தென்மராட்சிக் கோட்ட மகளிர் அரசியல் துறை அலுவலகத்தில் பெண்களுக்கான இலவச ஆங்கில வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளதாக தென்மராட்சிக் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலைவாணி தெரிவித்துள்ளார்.

மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த வகுப்புக்கள் இடம் பெறவுள்ளன. வறுமை காரணமாகவும் மற்றும் பல்வேறு நெருக்கடிகள் காரணமாகவும் பாதிக்கப்பட்ட பெண்கள் இந்த வகுப்புக்கள் மூலம் பயனடைய முடியும்.

அத்துடன் பாடசாலை செல்லும் மாணவிகளும் மாலை நேரங்களில் இந்த இலவச வகுப்புக்களில் பங்கு கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (28)

## உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேற்றம்; அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து மாநாடு

(தென்மராட்சி)

தென்மராட்சிப்பிரதேசத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியேற்றம் சம்பந்தமாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளதாக இடம் பெயர்ந்தோர் நலன்புரி சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்கள் குடியிருப்புக்களை படை முகாம்களாக மாற்றி மக்களின் மீள்குடியமர்வுக்கு தடையாகவுள்ள படையினரை விலக்கக்கோரியே இந்தக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் தலைமையில் எழுதுமட்டுவாள் வடக்கு, தெற்கு (விழுவளை), ஓட்டுவெளி, கரம்பகம், உசன், மிருசுவில் பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்களில் நிலை கொண்டுள்ள படையினரை வெளியேற்றுவது தொடர்பாக எடுக்க வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து இதில் ஆராயப்படவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ். அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்துறையினர், பொது அமைப்புக்கள், மகளிர் அமைப்புக்கள், தேசிய எழுச்சிப் பேரவையினர், இப்பகுதிக் கிராம சேவையாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (28)

## நகர விளையாட்டு மைதானத்தை புனரமைக்கும்படி வேண்டுகோள்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகர விளையாட்டு மைதானத்தை புனரமைத்துத் தருமாறு விளையாட்டுத்துறை ஆர்வலர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இந்த விளையாட்டு மைதானம் பாரியளவில் சேதமடைந்துள்ளதுடன் இதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதனை சம்பந்தப்பட்ட தரப்பினர் புனரமைப்பதன் மூலம் இளைஞர்களிடையே விளையாட்டுத்துறையினை விருத்தி செய்வதுடன் இப்பகுதிகளில் ஏற்படும் குழு மோதல்களையும் ஓராளவு தவிர்க்க முடியுமென விளையாட்டுத் துறை ஆர்வலர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (28)

## பாதிக்கப்பட்டோருக்கு உதவி

வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட பனை தென்னைவள அபிவிருத்திசார் குடும்பங்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 150 குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. (33)

# ஆனையிறவில் புலிகளின் வெற்றி வரலாற்றுத் திருப்பு முனை!

~ ஜெயராஜ்

2000ஆம், 2001ஆம் ஆண்டுகளில் ஏப்ரல் மாதத்தின் பிற்பகுதியில் சிறிலங்கா இராணுவம் தனது காயங்களைக் கழுவிக் கொண்டிருக்கையில், விடுதலைப்புலிகள் இயக்கம் ஆனையிறவுப் பெரும் படைத் தளத்தைக் கைப்பற்றியதும், பாதுகாத்தது மான பெரும் சமர்களில் வெற்றிபெற்று தாம் ஓர்அசைக்க முடியாததொரு சக்தி என்பதை உலகிற்கு வெளிக்காட்டியதோடு, இவ்வெற்றிகள் குறித்து தமிழ் மக்களுடன் கொண்டாடிக் கொண்டிருந் தது.

இன்றும் இவ்வெற்றிகளின் ஐந்தாம் ஆண்டு நான்காம் ஆண்டு நிறைவினை விடுத லைப் புலிகள் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இவ் வெற்றியானது ஐந்து ஆண்டு கள் என்ன ஐந்நூறு ஆண்டு கள் வரையிலும் தமிழ்



மக்களினால் கொண்டா டப்படுவதற்கு ஏற்ற மகத்தான வெற்றி என்பதில் எவருமே சந்தேகமோ, ஐயமோ கொள்ளத் தேவையில்லை.

ஆனையிறவுப் படைத்தளத்தின் வீழ்ச்சி யானது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெரும் திருப்புமுனை என்பது அனைத்து தரப்பினராலும் ஏற்றுக்கொள் ளப்பட்டதொன்று. உலகின் இராணுவ விற் பன்னர்கள், விமசர்கள் பலரும் பல கேள்வி களுடன் இச்சமரை அவதானித்து நிற்கை யில், விடுதலைப்புலிகள் ஆனையிறவுப் படைத் தளத்தை தமது தொடர் தாக்குதல் மூலம் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

ஓயாத அலைகள் - III நடவடிக்கை வன்னிப் பெருநிலப்பரப்பில் பெரும் இராணுவ வெற்றிகளை ஈட்டியவேளை, புலிகளின் அடுத்த இலக்கு ஆனையிறவுப் பெரும் படைத்தளத்தின் மீதான தாக்குதல்கள் தான் என்பது உணரப்பட்ட தாகவே இருந்தது. இதற்கேற்ப சிறி லங்காப் படைத்தளமும் மிகப் பலம் மிக்கதானதொன்றாக புலிகளின் எத்தகைய சவால்களையும் சந்திக்கும் வகையில் சிறி லங்காப் படைத் தரப்பினால் பலப்படுத் தப்பட்டதாக இருந்தது.

ஆனையிறவுப் படைத்தளத்தைப் பாது காப்பதற்காக இரண்டு டிவிசன் படையணிகள் அங்கு நிறுத்தி வைக்கப் பட்டன. இப்படையணிகளில் நன்கு தேர்ச்சிபெற்ற கொமாண்டோப் படைப் பிரிவுகள் உட்பட அதிநவீன



ஆயுத தளபாடங்களும் குவிக்கப்பட் டிருந்தன.

களப் பகுதியில் 155 மில். மீற்றர், 122 மி. மீற்றர் ஆட்லறிகள், டாங்கிகள் மற்றும் மோட்டார்கள், கனரக பீரங்கிகள் என்பன நிலை நிறுத்தப்பட்டிருந்தன. இவற்றிற்கும் மேலாக யாழ். குடாநாட்டில் நிலை கொண் டிருந்த ஆயுதப் படைப் பிரிவுகள் ஆனை யிறவுப் படைத்தளத்திற்கு தரையாலும், கடலாலும், வானாலும் பாதுகாப்பு வழங்குவதற்குத் தயாராக இருந்தன. இவையாவற்றுடனும், வெளிநாட்டு இரா ணுவ ஆய்வாளர்களின் ஆலோசனையும் பெறப்பட்டிருந்தது.

ஆனையிறவுப் படைத்தளம் மீதான தாக்குதலை விடுதலைப்புலிகள் ஆரம்பிக் கத் தயாராகவுள்ளதாக தகவல்கள் வெளி யானபோது கொழும்பிலுள்ள பிரபல இரா ணுவ ஆய்வாளர் ஒருவரிடம் சக்தி வாய்ந்த வெளிநாடு ஒன்றின் ஆலோசகர் களில் ஒருவர் தெரிவித்தாரா்ம், ஆனை யிறவைப் புலிகளால் ஒருபோதும் கைப்பற்ற முடியாது. [illegible]னியைப் போலல்லாது ஆனையிறவில் இராணுவம் சிறப்பாகப் போரிடும் எனத் தெரிவித் தாராம்.

ஆனால், சகலருக்கும் அதிர்ச்சியூட்டும் வகையில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் வியூகம் இருந்தது. சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு எவ்வளவு முனைந்தும் ஆனையிறவுப் படைத் தளத்தைக் காப் பாற்ற முடியாதுபோய்விட்டது. சிறிலங்கா இராணுவம் ஆனையிறவுப் படைத்தளத் தில் இருந்து தனது இறந்த சகாக்களை யும், பெருந்தொகையான இராணுவத்தள பாடங்களையும் கைவிட்டுவிட்டு தப்பி யோட வேண்டியிருந்தது.

ஆனையிறவில், கொல்லப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தின ரின் சடலங்களையும் சிறிலங்கா அரசாங்கம் பொறுப்பேற்க மறுத்தது. அவ்வாறு பொறுப்பேற்பது அவமானகரமானதென அது கருதியது. வழமைபோலவே சிறி லங்கா ஆயுதப் படைத்தரப்பு ஆனையிற வில் இருந்து இராணுவம் தந்திரோபாய ரீதியில் பின்வாங்கியுள்ளது எனத் தெரி வித்தபோது முன்னாள் சிறிலங்கா இரா ணுவ அதிகாரிகளே இதனைக்கேலி செய்தனர். ஏனெனில், சிறிலங்கா இராணுவம் சந்தித்த இத்தோல்வியானது இலங்கையின் இராணுவ, அரசியல் ரீதியில் பெரும் பாதிப்பை விளைவிப்ப தாகியது குறிப்பாக

1, கேந்திர முக்கியத்து வம் மிக்க ஆனையிறவு இழக்கப்பட்டமை.

2, இராணுவச் சம நிலையில் ஏற்பட்ட பாதிப்பு.

3, அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்ட பாதிப்பு.

ஆனையிறவுப் பிரதேசத்தில் முக்கியத்துவம் பற்றிக் கூறுவதானால், அது யாழ். குடாநாட்டின் நுழைவாயில் ஆகும். இவ்வாயில் யார் கையில் இருக்கின்றதோ, அவர்கள் யாழ். குடா நாட்டை இராணுவ ரீதியில் கட்டுப்பாட்டிற் குள் கொண்டுவருவதற்கு பெரும் வாய்ப் பாக இருக்கும்.

சிறிலங்கா இராணுவம் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைகளை யாழ். குடா நாட்டில் மேற்கொண்டபோது ஆனையிற வுப் படைத்தளம் சிறிலங்கா இராணுவத் திடம் இருந்தமை காரணமாகவே புலிகள் வன்னிப் பெருநிலப்பரப்பிற்குத் தந்தி ரோபாய ரீதியிலான பின்வாங்கலை மேற் கொள்ள வேண்டியதாக இருந்தது. அன்று ஆனையிறவு புலிகளின் கையில் இருந்திருக்குமானால், தென்மாரட்சியையும், வடமராட்சியையும் சிறிலங்கா இராணுவம் இலகுவில் கைப்பற்றியிருக்க முடியாது. வேட்டுக்கள் தீர்க்கப்படாமல் வட மராட்சியைக் கைப்பற்றிவிட்டதாக அன் றைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனு ருத்த ரத்வத்த பெருமைப்பட்டுக் கொண் டிருக்க முடியாது.

அடுத்ததாக, சிறிலங்கா இராணுவத்திற் கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையி லான இராணுவச் சமநிலையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. விடுதலைப்புலி களுடன் எப்பொழுதும் இராணுவ மேலா திக்க நிலையில் இருந்துகொண்டு பேசவே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம் விரும்பியது. இதனை அன்றைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, வெளிவிவ கார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் போன்றோர் வெளிப்படுத்தவும் தவற வில்லை. விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்த பின்னரே பேச்சு வார்த்தை, புலிகளுடன் கைகுலுக்கல் எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் போன்றவர் கள் கூறினர். செயற்பட்டனர்.

ஆனால், ஆனையிறவில் ஏற்பட்ட தோல்வியானது சிறிலங்கா ஆட்சியா ளர்களின் இராணுவ மேலான்மை யென்ற சிந்தனையினாலேயே இல்லாது ஒழிந்தது. ஓயாத அலைகள் III ஜயசிக்குறு, ரணகோச நடவடிக்கைகளை முறியடித்த போது ஓரளவு இராணுவச் சமநிலை காணப்பட்டதெனக் கொண்டாலும் ஆனை யிறவு படைத்தளத்தின் வீழ்ச்சியுடன் இராணுவ சமநிலை என்பது விடுதலைப் புலிகளுக்குச் சாதகமாகியது. சிறிலங்காப் படைத்தரப்பு இராணுவ ரீதியிலான மேலான்மையைப் பேசுவதென்பது கேலிக் குரிய தொன்றாகியது.

மூன்றாவதாக, அரசியல் சூழ்நிலையி லும் பெரும் மாற்றம் ஏற்படத் தொடங்கி யது. சனாதிபதி சந்திரிகாவின் "சமாதானத் திற்கான யுத்தம்" என்ற சித்தாந்தத்திற்கு ஆனையிறவில் பெரும் அடி விழுந்தது. இராணுவ ரீதியில் விடுதலைப்புலிகளை ஒடுக்குதல், ஓரம் கட்டுதல் என்பது சாத்திய மாகாத நிலையில் சர்வதேச ஏற்பாட்டாளர் களின் துணையுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்தும் சிறிலங்கா அரசி யல் தலைமை சிந்திக்கத் தொடங்கியது.

இந்த வகையில், ஆனையிறவுப் படைத்தளத்தின் வீழ்ச்சியானது இராணுவ, அரசியல் ரீதியில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தியதோடு, சிறிலங்கா படைத் தரப்பிற்கு சில அடிப்படைச் சிக்கல்களைத் தோற்றுவிப்பதாகவும் இருந்தது. இதில், முக்கியமானது யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகள் மீதும் விடுதலைப்புலி கள் தாக்குதலை நடத்தலாம் என எழுந்த அச்சமே ஆகும்.


இந்நிலையில் ஆனையிறவைத்தவிர ஓயாத அலைகள் III மூலம் விடுதலைப் புலிகள் நிலை கொண்ட பகுதிகள் மீது முதல் கட்ட நடவடிக்கைகளை இராணுவம் மேற்கொண்டது. இதன் பிரகாரம் வலிகா மத்தில் கொழும்புத்துறை பகுதியிலும், தென்மராட்சியில் சாவகச்சேரி, கைதடி, நாவற்குழி பகுதிகளில் இராணுவ நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நடவடிக் கைகளில் இராணுவம் பெற்ற வெற்றியா னது சிறிலங்கா இராணுவத்திற்கு புதிய தென்பை ஊட்டியது.

அது மட்டுமன்றி, ஆனையிறவு படைத் தளத்தை புலிகள் கைப்பற்றியதுடன் சர்வ தேச நாடுகளிடம் சிறிலங்கா அரசு பகிரங்க இராணுவ உதவி கோரியதினால் பல அனு கூலங்களையும் ஈட்டியது. குறிப்பாக, பாகிஸ்தான், செக்குடியரசு என்பனவற்றில் இருந்து பல நவீன பீரங்கிகளும் ஆயுத தளபாடங்களும் கிடைக்கப்பெற்றன. குறிப் பாக, பலகுழல் எறிகணை செலுத்தி - (மல்டிபெரல்) போன்ற ஆயுத தளபாடங்கள் சிறிலங்கா; ஆயுதப்படைக்குக்கிடைக்கப் பெற்றிருந்தது.

இந்த நிலையில்,ஆனையிறவுப் படைத் தள வெற்றியின் பின் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளுக்கு வழங்கிய ஒத்து ழைப்பு, அதற்கான முன் முயற்சிகள் எவை யும் சிறிலங்கா அரச தரப்பினரால் கருத்திற் கொள்ளப்படவில்லை. குறிப்பாக, நோர் வேத் தரப்பின் சமாதான முயற்சிகளுக்கு விடுதலைப்புலிகள் வழங்கிய ஒத்துழைப்பு, ஒருதலைப்பட் சமான யுத்த நிறுத்த அறிவிப புகள் என்பன அரசாங்கத் தரப்பால் புறம் தள்ளப்பட்டன.

மாறாக, விடுதலைப்புலிகளின் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த காலத்தை சிறிலங்காப் படைத் தரப்பு தன்னைப் பலப் படுத்திக் கொள்வதற்கும், யாழ். குடா நாட் டில் விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டில் இருந்த பகுதிகளை மீளக் கைப்பற்றிக் கொள்வதற்குமான கால அவகாசமாகவே பயன்படுத்திக் கொண்டது.

அத்தோடு, இக்கால பகுதியில், கிடைக் கப்பெற்ற ஆயுத தளபாடங்களும், சில வெற்றிகளும் ஆனையிறவுப் பிரதேசத்தை மீளவும் கைப்பற்றுவதற்கான தூண்டுதலைச்




சிறிலங்கா படைத் தரப்பிற்குக் கொடுத்தது. இதன் நிமித்தம் பெருமளவு பயிற்சி நட வடிக்கைகளிலும், தயாரிப்பிலும் சிறிலங்கா இராணுவத் தரப்பு இறங்கியது.

இந்நிலையில், 2001 ஏப்ரலில் 25ஆம் திகதி அதிகாலை விடுதலைப்புலிகளின் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம் முடி விற்கு வந்து நான்கு மணித்தியால இடை வெளியில் தீச்சுவலை என்னும் பெய ரில் பாரிய படை நடவடிக்கை ஒன்றைச் சிறி லங்கா இராணுவம் ஆரம்பித்தது.

நன்கு தயார் செய்யப்பட்ட நிலையில் மூன்று டிவிசன்களைக் கொண்ட பல ஆயிரக் கணக்கான துருப்புக்கள், டாங்கிகள், கவச வாகனங்கள் என்பனவற்றின் துணையுடன், ஆட்லறிகள், பலகுழல் எறிகணைச் செலுத திகளின் ஆதரவுச் சூட்டுடனும், விமானப் படை யின் குண்டு வீச்சு உதவி என்பனவற்றுடன் இப்பாரிய படை நடவடிக்கை ஆரம்பிக் கப்பட்டது.விடுதலைப்புலிகளின் முன்னணி

(07ஆம் பக்கம் பார்க்க)

# 18-04-2005 - 24-04-2005




## 18


☐ நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் தொலைபேசி மூலம் உரையாடினார்.


☐ சமாதானச் சூழலைச் சீர்குலைக்கும் அரச படைகளின் செயற்பாடுகளைச் சர்வதேச சமூகத்திற்கு விளக்கியுள்ளோம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் ஊடகம் ஒன்றிற்கு தெரிவிப்பு.

☐ துணுக்காய் ஐயன்கன்குளத்தில் அமைந்துள்ள திலீபன் மருத்துவமனையின் மூன்றாம் ஆண்டு நிறைவு நிகழ்வை முன்னிட்டு அப்பகுதி மக்களால் தேசியத் தலைவருக்கான நினைவுக் கேடயம் வழங்கப்பட்டது.

## 19

☐ நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் மட்டக் களப்பிற்கு விஜயம் செய்து முத்தரப் பினரையும் சந்தித்தார். மிதக்கும் பாலத்தின் ஊடாக கொக்கட்டிச் சோலைக்குச் சென்று மட்டு-அம்பாறை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் பானுவைச் சந்தித்தார். இதன்போது சுனாமி மீள்கட்டுமானத்திற்கான இணைந்த பொதுக்கட்டமைப்பு அமுல் படுத் தப்பட்டால் நாம் நம்பிக்கையுடன் பேச்சுக் களை முன்னெடுக்கலாம் என கேணல் பானு தெரிவித்தார்.




☐ தியாகதீபம் அன்னைபூபதி அவர்களின் 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும், தமிழீழ நாட்டுப்பற்றாளர் தினமும் தமிழீழமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு.



☐ தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் இராஜாங்கச் செயலர் கிறிஸ்ரினா றொக்கா கொழும் பிற்கு விஜயம் செய்து பின்னர் கிழக்கிற்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.



☐ பேராசிரியர் சு.ப. வீரபாண்டியன் எழுதிய "பெரியாரின் இடது சாரித்தமிழ்த் தேசியம்" என்ற நூல் இந்தியாவில் வெளியீடு.

## 20

☐ ஐரோப்பிய பயணத்தை நிறைவு செய்து கொண்டு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் தாயகம் திரும்புகையில் கட்டு நாயக்க விமான நிலையத்தில் நோர்வே யின் சமாதானத் தூதுவர் எரிக்சூல் ஹெய் மைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.



☐ சுனாமி அனர்த்தப் பொதுக்கட்டமைப்பினை ஜே.வி.பி. திட்டவட்டமாக எதிர்க்குமென அமெரிக்கா வின்தெற்காசியாவுக்கான பிரதி இராஜாங்கச் செயலர் கிறிஸ்ரினா றொக்காவைச் சந்தித்த ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச தெரிவிப்பு. இதேவேளை, தமிழ்க் கூட்டமைப்பினருட னான சந்திப்பின் போது புலிகளின் தனி நாட்டுக் கோரிக்கையை அமெரிக்கா எதிர்க்கவில்லையென றொக்கா கருத்துரைப்பு.

## 21

☐ சிறிலங்கா அரசின் போக்கைக் கண்டித்து யாழ். தீவகத்திலும், சண்டிலிப்பாயிலும், மன்னாரிலும் கண்டனப் பேரணிகள் இடம்பெற்றன.

☐ திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரைச் சந்தித்து புலிகளின் கடல்வலயப் பகுதிக்குள் சிறிலங்கா கடற்படையினரின் பிரவேசத்தை அனுமதிக்க முடியாதெனத் தெரிவிப்பு.



☐ அம்பாறை மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் ஊடுருவிய ஆயுதக் குழு விரட்டியடிப்பு.

☐ வாழைச்சேனையில் இனந்தெரியா தோரால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை.

☐ எரிக்சூல்ஹெய்ம் ரணில் சந்திப்பு.



☐ இலங்கையிலிருந்து நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் புதுடில்லிக்கு பயணம். இதேவேளை, தெற்காசிய பிராந்தியத் துக்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலர் கிறிஸ்ரினா றொக்கா லண்டன் பயணம்.

## 22

☐ அயர்லாந்து சிறப்புப் பிரதிநிதிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமை யிலான குழுவினரைச் சந்தித்தனர். இதன் போது மனிதாபிமானப் பிரச்சினையில்கூட கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் மனமாற்றமின்மையையே காட்டுகிறதென அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்கள் எடுத்துரைப்பு.



☐ வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள படகு கட்டுமானத் தொழிற்சாலையை அயர்லாந்து சிறப்புத்தூதுக் குழுவினர் பார்வையிட்டனர்.



☐ வடமராட்சி துன்னாலைப் பகுதியில் மின்சாரம் தாக்கி பெண் ஒருவர் மரணம்.

☐ பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவின் உயர்நிலை அதிகாரி ஜெயரட்ணத்தை காணவில்லையென பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு.

☐ சிலாபத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் நல்லூர் வாசி ஒருவர் பலி.

☐ அடம்பனில் கல்விச் சேவை நிலையம் திறப்பு.



☐ ஆனையிறவு வெற்றி விழாவை சிறப் பித்து மாபெரும் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் பளைப் பகுதியில் ஆரம்பம்.




## 23

☐ நீர்வள உயிர்வள ஆசிரியர் சங்கத்தின் கடல்வள கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து வெளியேறிய ஆசிரிய மாணவர் களால் தேசியத்தலைவர் அவர்களுக்கான பாராட்டுக் கேடயம் வழங்கப்பட்டது.



☐ வடமராட்சி மாலுச் சந்திக்கு அண்மை யாக இடம்பெற்ற வீதிவிபத்தில் ஒருவர் பலி

☐ ஜேர்மன் மக்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதியுதவி சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லை மக்களுக்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக உபகரணங்கள் வழங்கப்பட்டது.



☐ பளைப் பகுதியில் பாரஊர்தியில் இருந்து வீழ்ந்து ஒருவர் மரணம்.

## 24

☐ சுனாமி பொதுக்கட்டமைப்பினை சர்வதேச சமூகமே வலியுறுத்தியதென சுதந்திரக்கட்சிப் பொதுச் செயலாளர் மைத்திரி பால சிறிசேன கண்டியில் இடம் பெற்ற கூட்டத்தில் தெரிவிப்பு.

---

### ஆனையிறவில்...

நிலைகளை ஊடறுத்து ஊடுருவிப் புலி களின் முன்னணிப் படையணிகளை முற்று கைக்குள்ளாக்கித்தாக்கி அழிப்பதோடு, ஆனையிறவு வரை முன்னேறி மீண்டும் ஆனையிறவை இராணுவத்தின் கட்டுப்பாட் டிற்குள் கொண்டு வருவதே இப்படை நடவ டிக்கையின் இறுதி இலக்காகும்.

சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பின் முப் படைத் தளபதிகளும் பலாலிப் படைத் தளத் தில் இருந்து இத்தாக்குதல் நடவடிக்கை களை வழிநடத்தினர். பெரும் எடுப்பிலான இப்படை நடவடிக்கையை எதிர்த்து விடு தலைப்புலிகள் நடத்திய உக்கிரச்சமரானது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகப் பெரும் முறியடிப்புச் சமர்களில் ஒன்றா கும்.இரவு- பகலின்றி நான்கு நாட்கள் நடை பெற்ற இவ் உக்கிரச் சமரில் சிறிலங்கா இராணுவம் பாரிய அளவிலான இழப்பைச் சந்தித்தது.இப்படை நடவடிக்கையின் வெற் றிச் செய்தியை எழுதுவதற்காகப் பலாலிப் படைத் தளத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்த கொழும்பு ஊடகவியலாளர்களுக்கு இறந்த மற்றும் காயமடைந்த படையணியினரின் எண் ணிக்கையைக் கணக்கிடுவதே சிரமமாகியது. இது குறித்துப் பின்னர் அவர்கள் பிரஸ்தா பிக்கவும் தவறவில்லை.

இந்த வகையில், விடுதலைப்புலிகள் ஆனையிறவுப் பிரதேசத்தை மீட்டெடுப்பதற்கு மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளை யும், அப்பிரதேசத்தை பாதுகாக்க மேற்கொண்ட முறியடிப் புச்சமரும் ஒன்றிணைந்து இன்றைய இலங்கையின் இராணுவ, அரசியல் வரலாற் றையேதீர்மானித்துள்ளதுஎனின்மிகையாகாது.

வெற்றிகரமான இவ்விரு சமர்களும் சிறி லங்கா இராணுவத்தின் தொழில்சார் திறமையைக் கேள்விக்குள்ளாக்கிய தோடு, சிறிலங்கா இராணுவ இயந்திரத்தை இயங்க வைக்க முடியாத இக்கட்டானதொரு நிலைக்கு இட்டுச் சென்றதெனலாம்.

இதனைத் தீச்சுவாலை நடவடிக்கையின் பின்னர் சிறிலங்கா இராணுவத் தரப்பு பாரிய படை நடவடிக்கைகள் எதையும் திட்டமிட முடியாமல் இருந்ததில் இருந்தே புரிந்து கொள்ள முடியும். ஆட்சியாளர்கள் சமாதான முயற்சிகளில் இணக்கப்பாட்டிற்குவராது போனாலும் அவர்களின் காயங்கள் ஆற்றப்பட முடியாதவையாகவே இருந்தன.

அதுமட்டுமல்ல, பொ.ஐ.முன்னணி அரசாங் கம் அடுத்த பொதுத்தேர்தலில் தோல்வி அடையவும், சமாதானப்பேச்சுவார்த்தைகளை ஆதரித்த ஐ.தே.முன்னணி ஆட்சி அதிகாரத் தைக்கைப்பற்றவும் ஆனையிறவில் இராணு வம் சந்தித்த தோல்விகளும் அடிப்படையா யின.இன்று கூடச் சிறிலங்கா ஆட்சியாளர்கள் யுத்தத்தையே விரும்புகின்றனர். ஆயினும், அவர்கள் கடந்த காலத்தில் இராணுவ ரீதியில் பெற்ற கசப்பான அனுபவங்கள் - அதிலும் குறிப்பாக, புலிகளின் ஓயாத அலை கள் - III பெற்ற வெற்றி இராணுவத்தின் தீச்சுவாலை நடவடிக்கையின் போது சந்தித்த இழப்பு என்பன அவர்களை யுத்தத்தைத் தேர்ந்தெடுக்க முடியாத அளவிற்கு அச்சத்தை கொடுப்பவையாகவுள்ளன.

அவ்வாறு இல்லாதுவிடில், ஐ.தே.முன் னணி அரசாங்கம் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்பாட்டை சமாதான முயற்சி களுக்கான முன்னெடுப்பதற்கான இடைக் கால நிர்வாகம், சுனாமி அனர்த்த நிதி முகாமைத்துவத் திற்கான பொதுக் கட்டமைப்பு ஆகிய அனைத்தையும். எதிர்த்துக்கொண்டும்-அதேவேளை, அவற்றை நிராகரிக்க முடியாமல் ஆளும் கூட்டணிக்குள் முரண்பட்டு பிணக்குகளை வளர்த்துக் கொண் டும் அவர்கள் இருக்க மாட்டார்கள். இது வரையில் யுத்தத்தை ஆரம்பித்திருப்பார்கள்.

# விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு; ஜே.வி.பியின் எதிர்ப்பு வரவேற்கத்தக்கதாம்

## -ஹெல உறுமயக் கட்சி கூறுகின்றது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் ஜே.வி.பி. காட்டி வரும் எதிர்ப்புகள் வரவேற்கத்தக்கது என ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் அக் கட்சியின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்க கருத்துக் கூறுகையில்;

பொதுக்கட்மைப்பு விடயத்தில் ஜே.வி.பி.மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சிறப்பானதாக அமைந்துள்ளன. எனவே எதிர்காலத்தில் அந்தக் கட்சியுடன் குறிப்பிட்ட விடயத்தில் எதிர்ப்பை வெளியிடுவதற்கு தாம் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார். யப்பான், முல்லைத்தீவில் துறைமுகம் ஒன்றை அமைக்கவுள்ளது. இது கடற்புலிகளின் தளபதி சூசைக்கு பெரும் வாய்ப்பை வழங்கப்போகிறது.

கிளிநொச்சியில் யப்பான் வைத்தியாலை ஒன்றை அமைப்பதற்கு தயாராகி வருகிறது. பயங்கரவாதம் நிலவும் ஈராக் போன்ற நாடுகளுக்கு யப்பான் இவ்வாறான உதவிகளை வழங்காமல் ஏன் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மாத்திரம் வழங்க வேண்டுமென சம்பிக்க ரணவக்க கேள்வி எழுப்பினார்.

தற்போதைய நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சர்வதேசத்தின் நேரடி உதவிகள் சென்றடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இது தடுக்கப்படவேண்டுமென அவர் குறிப்பிட்டார். ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இந்தோனேசியாவின் அச்சே பிராந்தியத்தில் அங்குள்ள போராளிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென சர்வதேசம் ஏன் கேட்கவில்லை.

தாய்லாந்து ஜம்மியா இஸ்லாமிய அமைப்புடன் அந்த நாட்டு அரசாங்கம் பொதுக்கட்டமைப்பை செய்துக்கொள்ள வேண்டுமென சர்வதேசம் கோரவில்லை இலங்கையில் மாத்திரம் இவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளமையானது நாட்டின் இறைமையை பாரியளவில் பாதிக்கும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார்.

இதற்கிடையில் அங்கு கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தனதேரர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆழிப்பேரலை புனர்அமைப்புகள் தொடர்பில் 60 மில்லியன் டொலர்கள் கிடைத்துள்ளதாக நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் அண்மையில் தெரிவித்திருந்தார். அத்துடன் ஜேர்மன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் தமிழ்ச்செல்வன் வெளிநாடு சென்றிருந்த போது பெருமளவு நிதி வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலைக்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் பயங்கரவாத அமைப்பு ஒன்றுக்கு இவ்வாறான சட்ட அங்கீகாரத்தைக் கொடுத்தமை அரசாங்கத்தின் குற்றமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

# தேசிய கல்வியியற்கல்லூரிகள் இரண்டாம் திகதியே ஆரம்பமாகும்

## பட்டமளிப்பு விழாவும் பிற்போடப்பட்டது

(கொழும்பு)

தேசிய கல்வியியல் கல்லூரிகளின் இரண்டாம் தவணை கல்வியூட்டல்கள் அடுத்த மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. ஏற்கனவே தேசிய கல்வியியற் கல்லூரிகளின் இரண்டாம் தவணை இன்று ஆரம்பமாக இருந்தது. எனினும் அது தற்சமயம் பிற்போடப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது..

இதேவேளை எதிர்வரும் மே நாலாம் ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருந்த தேசிய கல்வியியற் கல்லூரிகளின் முதலாம் அணிக்கான பட்டமளிப்பு நிகழ்வும் திகதியின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பட்டமளிப்பு தொடர்பில் நாளை யாழ்ப்பாண கல்வியியற் கல் லூரிக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டிருந்த யாழ்ப்பாண கல்வியியல் கல்லூரியின் முதலாம் அணி மாணவர்கள் அன்று வருகை தர தேவையில்லை என அந்த கல்வியியற் கல்லூரியின் பிரதித் தலைவர் சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

# நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கம் ஐ.தே கட்சிக்கு இல்லை-ரணில்

(கொழும்பு)

நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லை என அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி மீது ஜே.வி.பி.யும் சுதந்திரக் கட்சியும் பலத்த குற்றச்சாட்டுக்களை வைத்துவரும் நிலையில், அப்படி நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கமெதுவும் தமக்கில்லை என்பதை தெளிவுபடுத்தும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி அவசரமாக இறங்கியுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது..

ஐ.தே.க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், பொருளாதாரத்தில் சிதைவடைந்துள்ள நாட்டை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில், விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்த தமது கட்சி, அதே நோக்கத்துடன் பேச்சுக்களைத் தொடரும் என்றும், இது தவிர நாட்டைப் பிளவுபடுத்தும் எந்த எண்ணமும் தமது கட்சிக்கு இல்லை என்றும் தெளிவு படுத்தியுள்ளார். நாட்டின் ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பேணும் அதேவேளையில், தேசியப் பிரச்சினைக்கும் ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதே தமது கட்சியின் குறிக்கோள் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர, ஒரு தேசியக் கொள்கை முன்னெடுக்கப்படுவது அவசியம். தேசிய இணக்கப்பாடு காண்பதும் அவசியம். எனினும், இலங்கையில் தற்போது ஆட்சி நடத்தும் கட்சியிடம் அத்தகைய எந்தவொரு தேசியக் கொள்கையையும் தற்போது காணமுடியவில்லை. தற்போதைய அரசு, பொதுக்கட்டமைப்பு குறித்துக்கூட எதிர்க்கட்சியுடன் விவாதிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொதுக்கட்டமைப்புக்குறித்து சிங்கள மக்கள் அச்சமடைய வேண்டாம்

## -அமைச்சர் நிமால் சிறிபால டி.சில்வா

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு குறித்து சிங்கள மக்கள் அச்சமடையத் தேவையில்லையென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

இணைந்தகட்டமைப்பு எந்தவொரு நிர்வாக அதிகாரத்தையும் விடுதலைப்புலிகளுக்கு அளிக்காது. சிங்கள மக்கள் இப்பொதுக் கட்டமைப்பு நாட்டினுடைய அரசுரிமை, நிர்வாக அமைப்புப் பலவீனத்தை ஏற்படுத்தும் என்ற பிரச்சாரத்திற்கு குழப்பமடையத் தேவையில்லையென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பினை தோல்வியடையச் செய்ய ஒன்றுபடுமாறு நாட்டுப்பற்றுள்ள தேசிய இயக்கம் வேண்டுகோள்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புஅமைக்கும் திட்டத்தை தோல்வியடையச் செய்ய ஒன்றுபடுமாறு அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் நாட்டுப்பற்றுள்ள தேசிய இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கட்சியில் கருத்து வேறுபாடு இருந்தால் கூட எவராலும் தாய் நாட்டை கூறுபோட முடியாதென இவ்வமைப்பு அமைச்சரிடம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் மட்டும் கையாளப்படும் நிதி நிர்வாகம் பொதுக்கட்டமைப்பு ஏற்படும் பட்சத்தில் புலிகளுக்கு கிடைக்கும் என அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### பி.பி.சியின் சிங்கள சேவை தரமற்றது

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊடாகவும் ஒலிபரப்புச் செய்யப்படும் சந்தேசிய எனும் பி.பி.சி.யின் சிங்கள சேவை தரமான நிகழ்ச்சிகளை கொண்டிருக்கவில்லை என இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் ஹட்சன் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

### ஆர்ப்பாட்டங்கள் நடத்த முடிவு

மேல் கொத்மலை நீர்தேக்கத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மலையக நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளன. இது தொடர்பான தீர்மானம் நேற்று முன்தினம் எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் முதலாவது ஆர்ப்பாட்டம் எதிர் வரும 29 ஆம் திகதி பொகவந்தலாவில் இடம்பெறவுள்ளது. இதன் பின்னர் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்கள் ஏனைய மலையக நகரங்களிலும் நடத்தப்பட முடிவெடுக்கப்பட்டது.

# மேல்மாகாணசபை கலைக்கப்படமாட்டாது அமைச்சர் அலவிமௌலானா தெரிவிப்பு

(கொழும்பு)

மேல்மாகாணசபையை கலைப்பதற்கான நோக்கம் தனக்கு இல்லையென ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

மேல்மாகாணசபை கலைக்கப்படவுள்ளதாக வெளிவந்த தகவல் குறித்து அவர் கூறுகையில்; மாகாணசபை கலைப்பது தொடர்பாக சனாதிபதியின் ஆலோசனை கிடைக்க வேண்டும். இதேவேளை மேல்மாகாணசபையின் முதல்வர் றெஜினோல்ட்கூரே பதவி விலகல் தொடர்பாக எதுவித கடிதங்களையும் தம்மிடம் ஒப்படைக்கவில்லையெனவும் ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

# ராஜீவ் - பத்மநாபா கொலை தொடர்பில் கைதான இருவர் விடுவிப்பு

(சென்னை)

முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி, ஈ.பி.ஆர். எல்.எவ். தலைவர் பத்மநாபா ஆகியோரின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட இருவர் நாடு திரும்பலாம் என சென்னை உயர்நீதி மன்றம் தெரிவித்துள்ளது. ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு பின்னர் போதிய ஆதாரம் இல்லாத காரணத்தால் விடுதலை செய்யப்பட்டு இது வரை சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ள லிங்கம் தாயகம் திரும்பலாம் எனவும் இதேபோன்று ஈ.பி.ஆர்.எல். எவ்.தலைவர் பத்மநாபா கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு விடுதலையாகியும் சிறப்பு முகாமில் வாழ்ந்து கொண்டிருந்த வசந்தகுமாரும் தாயகம் திரும்பலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# யுனெஸ்கோ இல.பிரதிநிதியாக மங்கள சமரவீர நியமனம்

(கொழும்பு)

யுனெஸ்கோ நிறைவேற்று சபையின் இலங்கைக்கான பிரதிநிதியாக ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர சனதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சர் டாக்டர் கருணாசேன கொடித்துவக்கு முன்னாள் அரசாங்கத்தால் ஐந்து வருட காலத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார். ஆயினும் சனாதிபதியால் திடீரென இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. தனது பணிக் காலத்தை பூர்த்தி செய்ய அனுமதி தரும்படி அரசாங்க மாற்றம் காரணமாக புதிய நியமனம் அவசியமில்லை எனவும் கொடித்துவக்கு கேட்டிருந்தார். ஆனால் சனாதிபதி கொடித்துவக்கின் வேண்டுகையை அசட்டை செய்து மங்கள சமரவீரவை நியமனம் செய்துள்ளார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


# VACANCY

Applivstions are invited from a young and energetic person in the capacity of a senior community support officer on temporary basis for five months, to provide Co-ordinate Psychosocial care in Tsunami affected areas.

**The ideal candidate shoald posses**

★ Should posses a degree in recognized university.
★ Familiarity with social context of the community.
★ Good interpersonal skills.
★ Experience of community welfare activities.
★ Facilitation and negotiation skills.
★ Sensitivity to social and power relations(Gender, Caste, Class)
★ Familiarity with multisectoral approach.
★ Leadership skills.
★ Living within Kilinochchi District and should be able to work full time (i.e.8 her per day)
★ Preferable to posses motorbick and valid license.

**Payment Rs.500/- per day**

If you meet the above crieria send your CV with names of two non related referees to reach us on or before May 14th 2005 and mark on top left hand corner of the envelop as 'SCSO'.

Deputy Provincial Director of
Health Services,
DPDHS Office,
Kilinochchi.

(சி.11798)

# தகவல் தொழில்நுட்பத் துறையின் பயன்பாடுகள்

# கிராமப்புற மக்களைச் சென்றடைய வேண்டும்!

## இந்திய மத்திய அமைச்சர் தயாநிதி மாறன்

தகவல் தொழில் நுட்பத் துறையினால் ஏற்படுத்தப்படும் பயன்பாடுகள் கிராமப்புற மக்களைச் சென்றடைய வேண்டுமென்று மத்திய அமைச்சர் தயாநிதிமாறன் தெரிவித்துள்ளார். புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பம் பற்றியதான எலிரெக்ஸ்-2005 என்ற கண்காட்சி நிகழ்வை ஆரம்பித்து பேசிய போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்; தகவல் தொழில் நுட்பம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் வல்லுநர்களை உருவாக்குவதற்கு இத் துறைகளுக்கு தேவைப்படும் மனித ஆற்றலை மதிப்பீடு செய்ய இத் துறைகளுக்கும் கல்விமான்களுக்கும் இடையே நெருங்கிய செயற்பாடு இருக்க வேண்டும். தகவல் தொழில்நுட்பத்துறை வளர்ச்சிக்கு அரசு ஊக்குவிப்பாகச் செயற்படும். வளர்ந்து வரும் இத்துறைக்கு ஏற்ற வகையிலும், மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்பவும், கொள்கை வரைவுகளை அரசு உறுதி செய்யும்.

தகவல் தொழில் நுட்பமும் அதைச் சார்ந்த துறைகளும் உயர்ந்த நிலையை அடைவதற்கு உலக சந்தையில் இந்தியா முன்னணியில் இருப்பதற்கும் இன்னும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தற்போது தகவல் தொழில் நுட்பத்தின் பயன்களைப் நகர்ப் புறங்களில் உள்ளவர்கள் மட்டுமே அதிகளவில் பெற்று வருகிறார்கள். இப் பயன்கள் கிராமப்புற மக்களையும் சென்றடைய வேண்டும். நகர்ப்புறம் மற்றும் கிராமங்களிடையே உள்ள இடைவெளியை குறைப்பதற்கும் தகவல் தொழில்நுட்பச் சேவை வழங்கியதில் இந்தியா முன்னணி நாடாக விளங்குவதற்கும் உள்நாட்டு சந்தை வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் பத்து அம்சங்கள் கொண்டதிட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்தார். இரண்டு நாள் கண்காட்சி மற்றும் கருத்தரங்கிற்கு அமெரிக்கா, பிரிட்டன், யப்பான், சீனா உட்பட 18 நாடுகளின் பிரதி நிதிகள் கலந்து கொள்கின்றார்கள்.

### பிரதம தேர்தல் ஆணையாளராக பி.பி தாண்டன் நியமனம்

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய பிரதம தேர்தல் ஆணையாளராக பி.பி தாண்டன் நியமிக்கப்படுள்ளார். அவர் மே மாதம் 16ஆம் திகதி தனது பத வியை ஏற்கவுள்ளார்.


தற்போது தலைமைத் தேர்தல் ஆணையாளராக இருந்து வரும் டி.எஸ் கிருஷ்ணமூர்த்தி அடுத்த மாதம் ஓய்வு பெறவுள்ளார். எனவே அவருக்குப் பதிலாக தற்போது தேர்தல் ஆணையாளர்களில் ஒருவராக இருந்து வரும் 64 வயதுடைய பி.பி தாண்டன் புதிய தலைமை தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த அறிவிப்பை மத்திய அரசு நேற்று முன்தினம் வெளியிட்டது.

பி.பி தாண்டன் மே 16ஆம் திகதி புதிய தலைமைத் தேர்தல் ஆணையாளராகப் பதவியேற்பார். அடுத்த ஆண்டு யூன் மாதம் வரை அவர் இந்தப் பதவியில் இருப்பார். வழக்கமாக தலைமைத் தேர்தல் ஆணையாளர் மற்றும் தேர்தல் அதிகாரிகள் தேர்தல் பதவிக்காலம் 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை அவர்கள் பதவியில் இருக்கலாம். இதில் எது முதலில் பூர்த்தி ஆகிறதோ அதுவரை அவர்கள் பதவியில் இருக்க முடியும். பி.பி தாண்டனுக்கு அடுத்த ஆண்டு யூன் மாதம் 65 வயது ஆகின்றது. எனவே அவர் அதுவரையுமே தலைமைத் தேர்தல் ஆணை யாளராக இருக்க முடியும். பி.பி தாண்டன் தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்படும் முன் மத்திய ஊழியர் நலம் மற்றும் பொது மக்கள் குறை தீர்ப்பு திணைக்களத்தின் செயலாளராக பதவி வகித்தவராவார்.

# சாவு அறிவித்தல்

மலர்வு 03 ⚹ 12 ⚹ 1942



உதிர்வு 23 ⚹ 04 ⚹ 2005

## அமரர்.உயர்திரு.சொக்கலிங்கம் சாம்பசிவம்

தோணிக்கல் அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய பரிபாலனசபையின் கௌரவ செயலாளர்


எழுவதீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி திருவையாறு முதலாம் பகுதியில் வசித்து வந்தவரும் தற்பொழுது சிவன் கோவில் வீதி, தோணிக்கல்,வவுனியாவில் வசித்து வருபவருமாகிய சொக்கலிங்கம் சாம்பசிவம் 23.04.2005 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம்-சிவக்கொழுந்துவின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பர்வதம் ஆகியோரின் அன்பு மருமகனும், நல்லம்மாவின் அன்புக்கணவரும், தர்மநாயகம், மனோன்மணி, நித்தியானந்த பூபதி, சறோஜினி, காலஞ்சென்ற கோகுலாம்பாள். சொர்ண லிங்கம், காலஞ்சென்ற கமலநாதன், கணேசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசீகரன் (சுரேஸ்-M.A.G (INGO) நர்மதா (சுவிஸ்), நிரஞ்சனா, கவிதா (கனடா),கலாவதனா ஆகியோரின் அன்புத்தந்தையும், கருணாகரன் (சுவிஸ்), சிவகுமாரன் (கனடா), பிரகாஸ்(கனடா) ஆகியோரின் மாமனாரும்,தனுசியா, தனுசன், டினோசியா (சுவிஸ்),தவுசிகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியை கள் 28.04.2005 காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என அறியத் தருகின்றோம்.

சிவன் கோயில் வீதி,
தோணிக்கல் வவுனியா. (சி.11814)

தகவல்:
குடும்பத்தினர்.

# 45 ஆம் நாள் நினைவலைகள்



மேஜர்:- நவக்குமார்
(சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி)


கதிரவேலு சந்திரமோகன்
சாமிப்புலம், பூநகரி

பெற்றெடுத்த பிள்ளையுனைப் பேணிக் காத்து
உற்ற பல உற்ற பல உவந்தீந்தோம்.
ஒரு கொடியில் மலராக உதித்திருந்து
நற்றவராய் நானிலத்தில் நமைப் போற்ற
தாயகத்து வீரர்களில் வீரனாகி விழுதுமான
எங்களது சுடர் விளக்கின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

என்றும் உமது நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(6079)

# 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
05 ⚘ 11 ⚘ 1969

தாயக மண்ணில்
27 ⚘ 04 ⚘ 2001

நாட்டுப்பற்றாளர்

## கந்தையா - புஸ்பராஜா

### 427, கிளிநகரம், கிளிநொச்சி

விதி இட்ட பாதையில் விரைந்த
எம் அன்புத்தெய்வமே.
ஆரியனாம் அன்னியனெம்
அன்னை மண் விட்டகன்று
நேரியதோர் வழி பிறக்க
நித்தமுழைக்கும் நினைவால்
வீரியமாய்ச் செயல் புரிந்த
வியத்தகு நற்பூவரசை
சூரியனின் புயற் பொழுது
சுடராக்க வீழ்த்தியதோ

எம் அன்புத் தெய்வம் எம்மை விட்டு(4)வருடங்கள் போனாலும்- எம் மனங்களில் வாடாத மலராக மணம் வீசிக் கொண்டிருக்கும்.

தகவல்:-
குடும்பத்தினர்,
மனைவி, பிள்ளைகள்

(6080)

# வடக்கு கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கம்

## பணிநிலை வெற்றிடம்

எமது சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒப்பந்தக்காரருக்கு கீழ்வரும் பணி நிலையில் உள்ளவர்கள் தேவைப்படுகின்றனர்.

**பணிநிலை:-1**
**தொழில் நுட்ப உத்தியோகத்தர்**

**தரம்:-** (NCT, BCT, HNT) சான்றிதழ்கள் உடையவர்கள்(ஆண்கள் மட்டும்)

**வயது:-** (25-55)

**பணி நிலை:-2**
வேலை மேற்பார்வையாளர், கட்டட நிர்மாணத் துறையில் இரண்டு வருட அனுபவம் அல்லது க.பொ.த உயர்தரம் இரண்டு பாடச் சித்தி.

**வயது:-** (19-35).

மேற்படி வேலைத்திட்டமானது கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். 14.05.2005 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் பொதுமுகாமையாளர், தலைமைச் செயலகம், வடக்கு கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு தங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
வடக்கு கிழக்கு பிராந்திய
நிர்மாணிகள் சங்கம், தலைமைச்
செயலகம், கிளிநொச்சி. (11818)

# இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மே. தீவில் இரண்டு மாற்றங்கள்




நாளை மறுதினம் மேற்கிந்தியத் தீவின் அன்ரிகுவாவில் ஆரம்பமாகும் தென்னாபிரிக்க-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையேயான நான்காவதும் இறுதியுமான போட்டியில் ஆடும் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இரண்டு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

றியோன் கிங், றையன் ஹின்ட்ஸ் ஆகிய இருவரினதும் இடத்துக்கு வேகப்பந்து வீச்சாளர் டினோ பெஸ்ட்டும், சுழல்பந்து வீச்சாளரும் சகலதுறை வீரருமான நர்ஷிங் டியோநரினும் இணைக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு போட்டிகளில் தோல்விகண்டு தொடரை இழந்த படியால் இந்தப்போட்டியை தோல்வியிலிருந்து காப்பாற்றிக் கொள்ள எதையாவது செய்தாக வேண்டுமென பயிற்றுநர் ஜோய்கிரிவ் தெரிவித்துள்ளார்.

முன்னைய போட்டிகளில் அடைந்த தோல்வியால் வீரர்கள் உடல் உள ரீதியில் பாதிப்படைந்திருந்தாலும் பெஸ்ட் என்ற வேகப்பந்து வீச்சாளர் திரும்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் அணித் தலைவராக இன்சமாம் ஓராண்டுக்கு நீடிப்பு




இந்தியாவுக்கு எதிரான தொடரில் சிறப்பாக பணிபுரிந்துவெற்றி பெற்றதற்காக தலைவர் பதவியில் இன்சமாம் மேலும் ஒரு ஆண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளார். 2006 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறும் ஆசிய கோப்பை போட்டி வரை அவர் தலைவர் பதவியில் நீடிப்பார் என்று பாகிஸ் தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சகாரியார்கான் அறிவித்துள்ளார்.

35 வயதான இன்சமாம் 100 டெஸ்டில் விளையாடி 21 சதங்களைபெற்றுள்ளார். அவரது டெஸ்ட் சராசரி 50.02 ஆகும். 342 ஒரு நாள் போட்டியில் விளையாடி 10,859 ஓட்டம் எடுத்துள்ளார்.

பாகிஸ்தான் அணி அடுத்த மாதம் மேற்கிந்தியதீவு சுற்றுப்பயணம் செய்து விளையடவுள்ளது. இந்த தொடருக்காக பாகிஸ்தான் வரும் 2ஆம் திகதி அறிவிக்கப்படுகிறது.

# கோடோடென்னிஸ் தொடர் ரபெல் நாடல் சம்பியனானார்



கோடோடெண்ணிஸ் தொடரில் ரபெல் நாடல் சம்பியன் கோப்பையை கைப்பற்றினார். ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் இத் தொடர் நடந்தது இறுதிப்போட்டி கடந்த ஞாயிறன்று நடந்தது. இதில் ஸ்பெயினின் ரபெல்நாடல் சக நாட்டு வீரரான ஜுவான் கார்லோஸ் பெரேராவை எதிர்த்து விளையாடினார். உலகின் முன்னாள் முதல் நிலை வீரரான பெரேரா முதல்செட்டை 1-6என்ற கணக்கில் எளிதில் இழந்தார் அடுத்தடுத்த செட்களில் இவர் நெருக்கடி கொடுத்தாலும் சமாளித்து ஆடிய நாடல் வெற்றி பெற்றார். இவர் 6-1,7-6,6-3 என்ற செட்களில் பெரேராவை வீழ்த்தி, சம்பியன் பட்ட்ம் வென்றார்.

18 வயதான நாடல் இந்த ஆண்டில் பெறும் நான்காவது பட்டம் இது கடந்த வாரம் மோனாகோவில் நடந்த மான்டி கார்லோ தொடரிலும் இவர் பட்டம் வென்றுள்ளார்.

# பாகிஸ்தான் தொடர் மூலம் பாடம் கற்றுக்கொண்டேன்



பதான்

"பாகிஸ்தானுக்கு எதிராக அண்மையில் நடந்து முடிந்த கிரிக்கெட் தொடர் மூலம் நிறைய பாடம் கற்றுக்கொண்டேன். தவறுகள் என்னவென்று தெரிந்து கொண்டேன். மீண்டும் தவறிழைக்காத வண்ணம் ஆடுவதற்கான அறிவுரைகளையும் பெற்றுக்கொண்டேன்." என்று இந்திய பந்துவீச்சாளர் இர்பான் பதான் கூறியுள்ளார்.


எதிர்காலத்தில் மிகவும் திறமையுடன் ஆடமுடியும் என்கிற நம்பிக்கையும் தனக்கு உண்டு என்று அவர் சொன்னார்.

நன்றாக விளையாடும் போது ஒரு வீரருக்கு ஏராளமான பாராட்டுக்கள் குவிகின்றன. தோல்வியடையும் போது பலதரப்பில் இருந்தும் விமர்சனங்கள் வருகின்றன. இந்நிலையில் மேலும் கடினமாக உழைக்க வேண்டும் என்ற உணர்வுதான் வரவேண்டும். எதிர்காலத்தில் சிறப்பாக செயற்படுவேன் என்ற நம்பிக்கை உள்ளது.

வர்த்தக விளம்பரங்களுக்கான படப்பிடிப்பில் விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்வதில் தவறேதுமில்லை. ஏனெனில் கிரிக்கெட் போட்டி மற்றும் பயிற்சி ஆட்டங்கள் இல்லாத போது தானே இத்தகைய விளம்பரப் படப்பிடிப்பில் பங்கேற்கின்றனர்.

காயம் காரணமாக இந்திய அணியில் தற்போது இடம் பெறவில்லை. இனி இதுபோன்ற நிலைமை வராது பார்த்துக்கொள்வேன் என்றார்.

# கண்காட்சி முத்தரப்பு போட்டி சிறிலங்கா அணி அறிவிப்பு



அபுதாபியில் நடக்கும் கண் காட்சி முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.


ஐக்கிய அரபு எமிரெட்சிலுள்ள அபுதாபியில் ஷேக் சயீத் என்னும் புதிய கிரிக்கெட் மைதானம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் அறிமுக விழாவாக கண்காட்சி முத்தரப்பு ஒருநாள் தொடர் நடத்தப்படவுள்ளது. இதில் இந்தியா,பாகிஸ்தான்,இலங்கை அணிகள் பங்கேற்கின்றன. வரும் 29 இல் ஆரம்பமாகும் இத்தொடர் மே மாதம் முதலாம் திகதி முடிவடைகிறது. இதற்கான 14 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

முத்தையா முரளிதரன்,ஜெயசூரியா,சமிந்தவாஸ் மற்றும் உப்புல் சந்தரின போன்ற முன்னணி வீரர்கள் அணியில் சேர்க்கப்படவில்லை. இலங்கையின் அதிவேகப் பந்துவீச்சாளரான தில்ஹரா பெர்னாணடோவும் இடம் பெறவில்லை. தலைவராக அத்தப்பத்து தேர்வு செய்யப்பட்டுள்ளார். தவிர,இளம் வீரர்களே அதிகம் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மைக்கேல் வான்டோர்ட்,சாந்தா கலவிடிகொடாசூரஜ் முகமத்,மலிங்கா பண்பா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். சமீபத்தில் நடந்த நியூசிலாந்து தொடரில் அசத்திய இளம் வேகப்பந்து வீச்சாளர் மலிங்க இடம்பெற்றுள்ளார்.

அணி மார்வன் அத்தப்பத்து (தலைவர்),ஜெயவர்த்தனே,குமார் சங்கக்கர, தில்சான், குணவர்த்தனே, ரஷல் அர்னால்ட்,கயன் விஜிகோன்,லசித் மலிங்கா,ருசிரா பெரேரா, மைக்கோல் வான்டோர்ட்,சாந்தா கலவிடிகொடா,சூரஜ் முகமத் மலிங்க பன்தாரா,மற்றும் நான்டி காரன்ஜித்.

# இந்திய அணி பயிற்சியாளராக டீன்ஜோன்ஸ் விருப்பம் தெரிவிப்பு



இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு அவுஸ்திரேலியாவின் முன்னாள் துடுப்பாட்ட வீரரான டீன் ஜோன்சும் விருப்பம் தெரிவித்துள்ளார்.

அவர் இந்திய பத்திரிகை ஒன்றுக்கு அளித்தபேட்டியில் தான் 58 தடவைகள்இந்தியாவுக்கு வந்திருப்பதாகவும், பொதுமக்களிடம் நன்கு பழகிய அனுபவமிருப்பதாகவும் தெரிவித்ததுடன் தான் பயிற்றுநராகவர மிக்க ஆவலாக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

ஜோன்ஸ் 54 டெஸ்ட் போட்டிகளிலும் 164 ஒரு நாள் போட்டிகளிலும் பங்கு பற்றியுள்ளார். தனக்கு வாய்ப்பளிக்கப்பட்டால் இந்தியாவை சிறந்த அணியாக குறிப்பாக அவுஸ்திரேலிய அணிக்கு சமமான அணியாக உருவாக்குவேன் என்று தெரிவித்துள்ளார்.

இவரது சிறந்த துடுப்பாட்டமாக 1986ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக சென்னையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் பெற்ற (210) இரட்டைச் சதமாகும் சுமார் 8மணித்தியாலமாக களத்தில் நின்ற அவர் திடீரென சுகவீன முற்று வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதுடன் இவரது சாதனை இதுவரை முறியடிக்கப் படவில்லை எனக் கூறப்படுகிறது.




## தேர்வுக்குழு சரியில்லை - ரைட்

இந்திய கிரிக்கெட் அணி தேர்வுக் குழு சரியில்லை என ஜோன்ரைட் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்திய தேர்வுக்குழு கமிட்டி மிகவும் மோசம். இதிலுள்ள உறுப்பினர்கள் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான யோசனை வரும். இதனால் நல்ல பார்மிலு ள்ள வீரர்களுக்கு சில சமயம், அணியில் இடம் கிடைக்காமல் போய் விடுகிறது. அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் பயிற்சியாளரும் தேர்வுக்குழுவில் இடம் பெற்றுள்ளார்.

அணித் தேர்வின் போது பயிற்சியாளர் முக்கிய பொறுப்பு வகிக்கிறார். அவரது யோசனையில் வீரர்களை சேர்க்கவோ, நீக்கவோ செய்கின்றனர். ஆனால் இந்தியாவில் அப்படியில்லை. இதுவே சில தொடர்களில் இந்திய அணியின் தோல்விக்கும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.



இத்தாலியின் போலோக்னாவில் நடந்த இத்தாலியன் மேயர் லீக் கால்பந்து போட்டியில், பியோரென்டினா அணி வீரர் கிறிஸ்டியன் ஒபோடோ (இடது), போலோக்னா அணி வீரர் இக்லிடரே இருவரும் பந்தை தட்டிச் செல்ல பாய்கின்றனர். இந்தப் போட்டி 1–1 என்ற கோல் கணக்கில் சமனானது.

# எனக்கு தெரிந்த கிரிக்கெட்டில் சிறந்த அணித்தலைவர் கங்குலி



பாகிஸ்தான் தொடரிலும் தேவையில்லாமல் 'தூஸ்ரா' சர்ச்சை என்மீது சுமத்தப்பட்டது. அந்தத் தொடரில் எனது பந்து வீச்சு சரியில்லாமல் போனதற்கு இந்தப் பிரச்சினையே காரணம் தூஸ்ரா புகார் மனதைப் பாதிக்கும் போது எப்படிசிறந்த பந்து வீச்சை வெளிப்படுத்த முடியும்? என்கிறார் இந்திய சுழல்பந்து வீச்சாளர் ஹர்பஜன்.


இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் சவுரவ் கங்குலி சரியாக துடுப்பாட்டம் செய்வதில்லை என்று வரும் விமர்சனங்கள் வருத்தமளிக்கின்றன. எந்த வீரருக்கும், ஒரு சோதனையான தருணம் வரத்தான் செய்யும், நெருக்கடி நேரத்தில், அவருக்கு ஆறுதல் அளித்து பிரச்சினையில் இருந்து விடுபடஉதவவேண்டுமே தவிர கடுமையான விமர்சனங்கள் செய்து அவரது மனதை இன்னும் கூடுதலாகப் பாதிக்கக்கூடாது.

எனக்குத் தெரிந்த சர்வதேச கிரிக்கெட்டில் முதல்நிலை தலைவர் அவர்தான். கடந்த நான்கைந்து ஆண்டுகளாகஇந்திய கிரிக்கெட்டில் அவர் ஏற்படுத்திய மாற்றங்கள் அனைவருக்கும் தெரியும். இந்திய அணி அவரது தலைமையின் கீழ் தான் அதிக வெற்றிகளை வாரிக்குவித்திருக்கிறது நிச்சயம் அவர் சோதனைகளை முறியடித்து சிறப்பான ஆட்டத்தை மீண்டும் வெளிப்படுத்துவார் இவ்வாறு தெரிவித்துள்ளார் ஹர்பஜன்.

## கண்டாவளை பிரதேச வி.கழகங்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பம்

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 2005 ஆம் ஆண்டு விளையாட்டு விழா நிகழ்வு நேற்று மாலை 1.30 மணிக்கு விளைபூமி விளையாட்டு மைதானத்தில் கண்டாவளை பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் ஆரம்பமானது. விளையாட்டு விழாவை கிளி.மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோ கத்தர் சு.க[illegible]ராசா ஒலிம்பிக்தீபம் ஏற்றி ஆரம்பித்து வைத்தார். இதனைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் கருத்துரைகளும் இடம்பெற்றது. வெற்றியீட்டியவர்களுக்கு 'சான்றிதழ்களும், பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன. (46)

சிந்தனைக்கு



வீழ்ந்தவர்கள் எல்லாம் விதையாகிப் போனதால்தான் விடுதலைப் போர் இன்றும் தொடர்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 27-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# முக்கிய பிரச்சினைகள்!

இன்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னுள்ள முக்கிய பிரச்சினை யுத்தத்தினால் பாதிப்பிற்குள்ளான மக்களுக்கான புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கான இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான விவகாரமோ அன்றி சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்பிற்குள்ளாகியுள்ள மக்களின் வாழ்விற்கான மீள்கட்டுமானப் பணிக்கென பொதுக்கட்டமைப்பென்றை உருவாக்குவதோ அல்ல. ஆளும் கூட்டணிக்குள் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே ஆகும்.

ஏனெனில், ஆளும் கூட்டண்ிக்குள் முரண்பாடுகள் எவையும் இல்லை என ஆளும் தரப்பில் சிலர் வலியுறுத்த முனைகின்ற போதும் - ஆளும் கூட்டணிக்குள் உள்ள முரண்பாடுகள் தவிர்க்க முடியாது அவர்களின் நடவடிக்கை மூலமே வெளிப்படுத்தப்படு பவையாகவுள்ளன.

எடுத்துக்காட்டாக, மேல்மாகாண சபை முதலமைச்சர் ரெஜினோட் கூரே தொடர்பான விவகாரம் ஆளும் கூட்டணிக்குள் ஒருமித்த கருத்தை எட்ட முடியாத அளவிற்கு தீவிரம் பெற்றுள்ளது. முதலமைச்சர் மீது ஐ.தே. கட்சி கொண்டுவர உத்தேசித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதாக ஜே.வி.பி. எடுத்துள்ள முடிவை சனாதிபதி சந்திரிகாவினால் கூட மாற்றமுடியாமல் போயுள்ளமையானது இரு தரப்பினரிடையேயும் கருத்து முரண்பாடுகள் தீவிரத்தன்மை பெற்றவையாகவுள்ளதன் வெளிப்பாட்டையே காட்டுவதாகவுள்ளது,

ஆனால், ரெஜினோல்ட் கூரே விவகாரமானது, தனியாக ஜே.வி.பி. கூறிக்கொள்வது போன்று அவரின் நிர்வாகச் சீர்கேடு, ஊழல் மோசடி என்பனவற்றுடன் சம்பந்தப்பட்டதாக ஜே.வி.பி.யினால் கையாளப்படும் விவகாரமாகக் கொள்வதற்கு இல்லை. இவ்விவகாரத்தை ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஜே.வி.பி. பயன்படுத்திக் கொள்ள முனைகின்றது என்பதே உண்மையாகும்.

அதாவது, சனாதிபதி சந்திரிகா அண்மைக்காலத்தில் சுனாமி அனர்த்த உதவி நிதி முகாமைத்துவம் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் இணக்கப்பாடு ஒன்றிற்கு வருவது குறித்துப் பேசி வருகின்றார். அவர் விரும்பியோ அன்றி விரும்பாமலோ அல்லது உண்மையோ, பொய்யோ எதுவாகிலும் அவர் தனது பேச்சுக்களில் யார் எதிர்த்தாலும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் புலிகளுடன் உடன்பாடு ஒன்று காணப்படும் எனக் வலியுறுத்திக் கூறுகின்றார்.

இந்நிலையில், பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதற்கு ஜே.வி.பி தனது பலத்த ஆட்சேபத்தைத் தெரிவித்து வருகின்றது. பொதுக்கட்டமைப்பென்று உருவாக்கப்படும் பட்சத்தில் ஆட்சியைக் கவிழ்க்கவும் தாம் தயங்கப்போவதில்லை என ஜே.வி.பி. சூளுரைத்து வருகின்றது. இதற்கெனத் தற்பொழுது பெரும் எடுப்பிலான பிரசார நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில், ஜே.வி.பி யானது சனாதிபதி சந்திரிகாவின் எல்லைகளை நிர்ணயிக்க - அன்றி சனாதிபதியை எச்சரிக்கும் வகையிலேயே ரெஜினோல்ட் கூரேயின் விவகாரத்தைக்கையில் எடுத்துக் கொண்டுள்ளது. அதாவது, பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னோக்கி நகர்ந்தால் ஆட்சியைக் கவிழ்க்கத் தயங்கப்போவதில்லை என்பதே ஜே.வி.பி ரெஜினோல்ட்கூரே மூலமாக சனாதிபதி சந்திரிகாவிற்கு விடுக்கும் எச்சரிக்கையாகும்.

அதாவது, ஆளும் கூட்டணிக் கட்சிகள் ஒன்றை ஒன்று பகிரங்கமாக எதிர்க்கவும் கண்டிக்கவும் புறப்பட்டுள்ளமையானது அரசாங்கத் தரப்பிற்குள் பெரியளவிலான பிரச்சினைகள் தலைதுக்கியுள்ளன என்பதன் வெளிப்பாடே ஆகும். இந்நிலையில் சனாதிபதி சந்திரிகாவின் முன்னுள்ள பிரச்சினையாக ஏனைய யாவற்றையும் விட ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைப்பதாகவே இருக்கமுடியும்.

இந்நிலையில், ஜே.வி.பி யுடனான முரண்பாட்டைத் தீர்ப்பதும், உறவைப்பேணுவது தொடர்பாகவுமே சனாதிபதி சந்திரிகா இன்று செயற்பட முடியும். இதனை உணர்த்துவது போன்றதாகவே லண்டனில் இருந்து திரும்பிய சனாதிபதி முதல் விவகாரமாக ஜே.வி.பி. உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசியமை இருந்தது.

அவ்வாறு இல்லாது ஆளும் தரப்பினர் கூறுவது போன்று ஜே.வி.பி க்கும், சனாதிபதி சந்திரிகாவிற்கும் அன்றி சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் முரண்பாடுகள் எவையும் இல்லை எனில், இவ்விரு தரப்பினரும் இணைந்து உலகத்தை ஏமாற்ற விளைகின்றனர் என்பதே அர்த்தமாகும். அதாவது, ஜே.வி.பி யின் எதிர்ப்பானது சனாதிபதி சந்திரிகாவின் ஆசீர்வாதத்துடன் மேற்கொள்ளப்படுவதாகவே கொள்ளத்தக்கதாகும்.

இதன் மூலம், சனாதிபதி சந்திரிகா விரும்பினும் கூட அரசியல்கள யதார்த்தமானது பொதுக்கட்டமைப்பை உருவாக்க முடியாததொரு நிலையில் இருப்பதாக சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தும் செயலாகவே கொள்ளத்தக்கதாகும். சிங்கள ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காகவும், இன ஒடுக்குமுறை செயற்பாட்டிற்காகவும் எதையும் செய்யத் துணிந்தவர்கள் ஆகும், ஆகையினால், ஜே.வி.பி. - சந்திரிகா முரண்பாடு குறித்த உண்மை நிலை பொதுக்கட்டமைப்பு ஒன்று கைச்சாத்தாகினால் மட்டுமே தெரியவரக் கூடியதொன்றாகும்.

# மேல்மாகாண சபையை மே – 17 வரை ஒத்திவைக்க ஆளுநர் தீர்மானம்!

## - ஐ.தே.க கடும் கண்டனம்

(கொழும்பு)

மேல்மாகாண சபையை எதிர்வரும் மேமாதம் 17ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கு ஆளுநர் அலவிமௌலானா தீர்மானித்துள்ளார்.

மேல் மாகாணசபையின் முதலமைச்சர் றெஜினோல்ட் கூரேக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படவிருந்த போதே இச்சபை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேல்மாகாணசபையின் முதலமைச்சர் றெஜினோல்ட் கூரேக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசேட குழுவின் மூலம் விசாரணைகளை நடத்தியதன் பின்னர் எதிர்கால நடவடிக்கைகள் குறித்துத் தீமானித்ததாக ஆளுநர் அலவிமௌலானா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல்மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் கூரேக்கு எதிரான நம்பிக்கையில்லாத் பிரேரணை மூலம் 11 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட் டுள்ளதாக ஆளுநர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் நான்கு குற்றச்சாட்டுக்கள் கடுமையான நிதி மோசடி மற்றும் சீர்கேடு தொடர்பானவையென அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, நேற்றுக்காலை மேல்மாகாணசபை கூடியபோது மேல்மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே கருத்துத்தெரிவிக்கையில், எனக்கெதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் 11 குற்றச்சாட்டுகள் உள்ளன. இவற்றுள் நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட விதமானது பாரதூரமான அடிப்படையான மோசடியானதாகக் காணப்படுகின்றது. அதுதொடர்பாக விசாரணைகளை நடத்த ஆளுநர் தீமானித்தார் மாகாண சபைக்குள்ளே எந்தவிதமான பொறுப்புமின்றி எவருக்கும் எதுவும் சொல்ல முடியும் அவற்றை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை அதனால் எமது கூட்டமைப்பினுள் மக்கள் விடுதலை முன்னணியும் இதில் சில உண்மைகள் இருப்பதாக கூறுகின்றது.

அதனால் கூட்டமைப்பிற்குள்ளேயே இவ்வாறான கருத்து ஒன்று நிலவுவதால் அவைமிகவும் ஆழமான முறையில்விசாரணைகள் செய்யப்பட வேண்டியவை எனவும் தெரிவித்தார். அதனையடுத்து சபையில் இருந்து வெளியேறிச் சென்ற ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் மாகாண சபை ஒத்திவைக்கப்பட்டதற்கு தமது எதிர்ப்பைத்தெரிவித்தனர்.

# கிளிநொச்சி வலயத்தில் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் விபரம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளிலிருந்து தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றுபவர்களில் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விபரங்கள் கீழ்வருமாறு,

கிளிநொச்சி மத்தியகல்லூரி - சூசைமுத்து பரம்சோதி,கிளிநொச்சி மகாவித்தியாலயம் - செல்வி ரேணுகா யோகலிங்கம், இரத்தினேஸ்வரன் கார்த்திகேயன், வரதராசா முரளிதரன்,அக்கராயன் அ.த.க பாடசாலை - சுந்தரலிங்கம் பிரபாகரன்,செல்வி முருகேசு நந்தினி,செல்வி மனோரஞ்சனி தம்மையா,கிளி.ஆனைவிழுந்தான் அ.த.க.பாடசாலை,முத்துலிங்கம் கங்காதேவி,செல்வி பவளராசா கோசலா,கிளிநொச்சி இராமநாதபுரம் ம.வி.செல்வி சின்னராசா யமுனேஸ்வரி,செல்வி செல்லையா தேவராணி,செல்வி சிவசுந்தராசா பவளமலர்,ஸ்கந்தபுரம் கலைமகள் வித்தியாலாயம் - செல்வி இந்துமதி சிவசுப்பிரமணியம்,நாச்சிகுடா அ.த.க.பாடசாலை - ஜெயக்கொடி ஜெயகரன்,செல்வி புனிதமலர் கனகரட்னம்,செல்வி விக்டோரியா அருணாசலம் ,சிவநகர் அ.த.க.பாடசாலை - செல்வி வரதராசா வசந்தரதி, கிளி/கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலை கிருசாந்தி குமாரலிங்கம் சுதா,வரதராசா செல்வி சுமங்கலி ரட்ணசிங்கம்,சின்னையா சந்திரகுமார், செல்வி திருநாவுக்கரசு யசிந்தா, திருவையாறு ம.வி. - செல்வி சயானி சின்னத்தம்பி, கந்தசாமி சுசீலாதேவி,திருமதி தயாகரன் ரேவதி, கனகபுரம் ம.வி. - செல்வி தவமகள் ராதா செல்லையா,கிளி/இந்துக்கல்லூரி செல்வி குழந்தையேசு ஜெசிந்தா,சிவநாதன் லெனின், கிளி/ புனித அந்தோனியார் றோ.க.பாடசாலை - செல்வி ஜயந்தி பாலசிங்கம்,செல்வி சிவபாலன் பிருந்தா, கண்ணகைபுரம் அ.த.க. பாடசாலை - நாகமணி பிரபாகரன், கிளி/ஸ்கந்தபுரம் அ.த.க.பாடசலை - செல்வி கௌசலா திருவருள் நாதன், கிளி/அக்கராயன் ம.வி - மனோகரன் ஜெயகாந்தன்,கிளி/பாரதி வித்தியாலயம் - திருமதி சுஜீவாசிவகுமார்,செல்வி கறுப்பையா கமலாதேவி, செல்வி வைத்திய லிங்கம் முத்துராணி, திருமதி இன்பராணி மோகன், கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை - செல்வி ஜெகதீஸ்வரி கைலாயபிள்ளை, கிளி/இந்துக் கல்லூரி ஆரம்ப பாடசாலை - செல்வி வேலுப்பிள்ளை சகுந்தலா தேவி,செல்வி ராசு சுதர்சினி,திருமதி கோமளா திருப்புகழ்குமார்,கிளி/ சென்திரேசா மகளிர் கல்லூரி - செல்வி யசோதாமலர் சிவதாசன், கிளி/புதிதபாத்திமா றோ.க.வித்தியாலம் - செல்வி லோகநாதன் மேரிறோசலின் முருகுப்பிள்ளை நிமலதாசன், மட்டுவில் நாடு அ.த.கபாடசாலை திருமதி விஜயகுமார் ஜெகதீஸ்வரி, கிளி/ புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம் - செல்வி செந்தில் குமரன் றமணி, கிளி/ஐயனார்புரம் அ.த.க.பாடசாலை செல்வி அனேட்சுகந்தினி டேவிற், செல்வி ஜெகதீஸ்வரி சுந்தரம், வட்டக்கச்சி ம.வி. - வைத்திலிங்கம் வேணுகரன், செல்வி கிருதேவி பாலபூபால்,கிளி/ பரமன்கிராய் அ.த.கபாடசாலை - திருமதி பிரகாஸ் சிவசக்தி செல்வி இராசக்கோன் அன்டுலோடியா, கிளி/ உருத்திரபுரம் ம.வி. - செல்வி துரைராசா தமிழினி,செல்லையா கணேந்திரன், கிளி/கண்டாவளை ம.வி. - செல்வி குலமினிதேவி கணபதிப்பிள்ளை செல்வி றஞ்சினி சிவபாதம், செல்வி ஜெயலதா கணபதிப்பிள்ளை, செல்வி கமலாவதி, சந்திரன், செல்வி சுபாஜினி வேலாயுதம், கிளி/ சூரன்பற்று கணேசா வித்தியாலயம் - செல்வி சுஜிதா கணபதிப்பிள்ளை செல்வி நவரட்ணம் சசிகலா, கிளி/ முகாவில் அ.த.க.பாடசாலை - திருமதி கருணாதிவாணி மாதவன் செல்வி திருஞானதேவி காத்திகேசு, செல்வி றஞ்சிதகுமார் வசந்தலீலா, கிளி/கோணாவில் அ.த.க.பாடசாலை திருமதி கணேசானந்தன் சிவமலர், கிளி/கிளாலி றோ.க.பாடசாலை - செல்வி ஆரோக்கியநாதன் ஜெயராணி, கிளி/பரந்தன் அ.த.க.பாடசாலை கந்தவனம் கிருசங்கர், கிளி/ கண்ணகை அம்மன் வித்தியாலயம் - செல்வி சண்முகநாதன் சஞ்ஜீவகி வினாயகமூர்த்தி வேலானந்தம் செல்வி யானகி பாலசிங்கம், செல்வி ஜெயகௌரி ஞானகணேசன், கிளி/ குமாரசாமிபுரம்அ.த.க.பாடசாலை - செல்வி மகாலிங்கம் சாரலாதா கிளி/ பிரமந்தனாறு ம.வி. - சபாநாயகம் ஜோகராஜன்,கிளி/கலவெட்டித்திடல் வித்தியாலயம் - செல்வி உசேந்தினி தியாகராசா, செல்வி சந்திரேஸ்வரி சிதம்பரநாதர், கிளி/தர்மபுரம் ம.வி - திருமதி புவனேஸ்வரிசேகர், ஆணையிறவு அ.த.க.பாடசாலை - செல்வி முத்துக்குமார் கருணாதேவி திருமதி வீரசிங்கம் றஜீதா, கிளி/ முரசு மோட்டடை அ.த.க, - செல்வி குருசாமி சந்திராணி,செல்வி இராசையா திலகராணி, கிளி/ நாகேந்திரா வித்தியாலயம் - செல்வி சிவகுல தங்கராசா,செல்வி குவேந்தினி குணரட்ணம்,கிளி/ பெரியகுணம் ஐயநார் வித்தியாலயம் - சுந்தரலிங்கம் துஷயந்தன், கிளி/ பல்லவராயன் கட்டு இந்து தமிழ்கலவன் பாடசாலை - செல்வி கலைவீரன நளினி சோமசுந்தரம், வலைப்பாடு றோ.க.பாடசாலை - இராமநாதன் சுரேஸ்,செல்வி ஜெயச்சித்தரா செபமாலை, கிளி/ கரியாலை நாகபடுவான் இல:2 அ.த.க.பாட சாலை - சுபோஜின் செல்வராசா, செல்வி கார்திகா கனகநாதன் செல்வி உதயகுமார் சந்திரவதனி, செல்வி அருள்வதனி விஜயரட்ணம், கிளி/முழங்காவில் ம.வி. - அருளையா யோகநாயகம், செல்வி குலா நாயகி அருளையா செல்வி கவிதா பாலசுப்பிரமணியம், சிவகுமாரன் திருக்கேதீஸ்வரன் ஆனந்தன் ஆனந்தரஞ்சன், பரராஜசிங்கம் சசிதரன்,கிளி/இரணைதீவு றோ.க.பாடசாலை - செல்வி ஜோன் கிறிஸ்டினா,செல்வி லோரன் ரூபி ரஞ்சிதமலர்,கிளி/சுண்ணாவில் அ.த.க.பாடசாலை இராமசாமி இரகுநாதன், கிளி/ஞானிமடம் அ.த.க.பாடசாலை - செல்வி பரராஜசிங்கம் ஜெயபாமினி கௌஜி வைத்தியலிங்கம் சுதாஸ்கரன்,செல்வி பஞ்சாச்சரம் கவிதா,செல்வி சிவலோகநாதன் சிறிரமணி செல்வி கந்தையா ஜெயலலிதா, கிளி/ வேரவில் இந்து ம.வி. - செல்வி தருமலிங்கம் யசோதாதேவி,செல்வி எட்வேட்சில்வா ஜரிம்சோபனி,கிளி/ கறுக்காய்தீவு அ.த.க.பாடசாலை செல்வி சிவசம்பு ரவிதேவி,செல்வி ஜெயலக்ஷ்மி குழந்தைவேலு, கிளி/ ஜெயபுரம் அ.த.க. - செல்வி ராமையா லிங்கேஸ்வரி,செல்வி பரமானந்தசிவம்தேவகி,செல்வி உசாணந்தினி ஜேசுதாசன், செல்வி திசாநாதன் சுகந்தி,செல்வி றஜனி இராயகோபால்,கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை - செல்வி கபிறிஜெல் இராசமலர்,கிளி/ செல்வாநகர் அ.த.க.பாடசாலை - செல்வி புஸ்பாஜெனோபா ஜாக்கோப்,கிளி/ஓட்டுப்புலம் அ.த.க. - செல்வி முனியாண்டி மலர். (சோ.34)

# நெருக்கடியான வேளையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய கல்விப் பணிப்பாளர்!

## அரியரத்தினம் அவர்களுக்கு வெ.இளங்குமரன் புகழாரம்

(அலுவலக செய்தியாளர்)

போர் இடம்பெற்ற நெருக்கடியான காலகட்டங்களில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய கல்விப் பணிப்பாளர் பசுபதி



அரியரத்தினம் என்று தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் பணிபுரிந்து முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு மாற்றலாகிச் சென்றுள்ள முல்லைத்தீவு வலய கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அவர்களுக்கு நேற்று கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற பிரிவுபசார நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் போர் இடம்பெற்றுக்கொண்டிருந்த நெருக்கடியான காலகட்டத்தில் கிளிநொச்சி வலயத்தின் கல்விப்பணிப்பாளராகபணியேற்றுக்கொண்ட அரியரத்தினம் சிறிலங்கா அரசு தமிழ் மாணவர்களின் கல்வியில் ஏற்படுத்திய தடைகளை ஊடகங்கள் மூலம் தமது உயரதிகாரிகளுக்குக்கூட அஞ்சாமல் வெளிப்படுத்தியதுடன் போர் நெருக்கடியான சூழலில் மாணவர்களின், ஆசிரியர்களின் வளர்ச்சியில் பல செயற்திட்டங்களை முன்னெடுத்து இரவு பகல் பாராமல் கிளிநொச்சி கல்வி வலயத்தின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர் எனவும் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.பத்மநாதன் பூநகரி மகாவித்தியாலய அதிபர் பொன். தில்லைநாதன் உட்பட பலர் பாராட்டுரை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டதுடன் பரிசில்களையும் வழங்கி முன்னாள் கிளி.வலயக் கல்விப்பணிப்பாளரைக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கப்டன் ரகுமதியின் வித்துடல் புனித விதைகுழியில் விதைப்பு

கடந்த 23 ஆம் திகதி தவறுதலான வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த கப்டன் ரகுமதி /திருமகள் (கமலேந்திரன் யோதிகா யாழ்ப்பாணம், த.முகவரி-பிள்ளையார் கோவிலடி செம்மண்குன்று பூநகரி) என்ற மாவீரரின் வித்துடல் நேற்று முழங்காவில்மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் விதைக்கப்பட்டது.

முன்னதாக இம்மாவீரரின் வித்துடல் அவரது இல்லத்திலிருந்து எடுத்து வரப்பட்டு முழங்காவில் மாவீரர் மண்டபத்தில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

பொதுச் சுடரை தமிழீழ மாவீரர் பணிமனை துணைப்பொறுப்பாளர் அர்ச்சனா ஏற்ற மலர் மாலையை மாவீரரின் பெற்றோர் அணிவித்தனர். மன்னார் மாவட்ட கடற்புலிகளின் மாவீரர் பணிமனை பொறுப்பாளர் கு.இளவழகன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளி.மாவட்ட மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் பூவிழி,சோதியா படையணிப்போராளி முகிலரசி நினைவுரையாற்றினர்.

அதனையடுத்து மாவீரரின் வித்துடல் கடற்புலிகளின் பாண்ட் இசைஅணிவகுப்புடன் முழங்காவில் மாவீரர் துயிலும்இல்லத்திற்கு எடுத்து வரப்பட்டு பூரண இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது.

# ஐ.தே.க.சனாதிபதி வேட்பாளராக கருஜெயசூரியவை நிறுத்த முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக கருஜெயசூரியவை நிறுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்றுக் குழுவினர் ஈடுபட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கிய 11 தேர்தல்களில் தோல்வியடைந்துள்ளதால் இம்முறை சனாதிபதி வேட்பாளராக கருஜெயசூரியவை நிறுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஒரு பிரிவினர் கருதுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க சனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டால் அவரால் வெற்றி பெற முடியாது என்றும் அவர் மக்கள் செல்வாக்கினை இழந்துள்ள ஒருவர் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்றுக் குழுவினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# குவேனி உள்ளிட்டோர் மீதான தாக்குதல்; அடையாள அணிவகுப்பு ஒத்திவைப்பு

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகள் மீதான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு மூன்றாவது தடவையாக நேற்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பெரியகல்லாறைச் சேர்ந்த ஜோன்சன் ஜெயசாந்தன் என்பவரே கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பு நடைபெற இருந்த போதிலும் குறிப்பிட்ட சாட்சியங்களான மூன்று பெண் போராளிகள் சமூகமளிக்கவில்லை. இதனையடுத்து நீதிபதி ரீ.எம்.மானங் எதிர்வரும் பத்தாம் நாளுக்கு அடையாள அணிவகுப்பை ஒத்திவைத்து அதுவரை விளக்கமறியலை நீடித்துள்ளார்.

-சுனாமியால் முல்லை மாவட்டத்தில்-

# பாதிக்கப்பட்ட மக்களுக்கான அதே இடத்தில் சேவை!

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியினாலும், போரினாலும் பாதிக்கப்பட்ட மக்களிற்கான அதே இடத்தில் சேவையானது முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும், புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியிலும், எதிர்வரும் ஆறாம் ,ஏழாம், எட்டாம்திகதிகளில் நடைபெறவுள்ளது.

அதில் கரைதுரைப்பற்று, மாந்தை கிழக்கு,துணுக்காய்ப் பிரதேச மக்களுக்கு,முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரியிலும், புதுக்குடியிருப்பு ஒட்டிசுட்டான் பகுதி மக்களுக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் அதே இடத்தில் சேவை நடைபெறவுள்ளது.

முன்புதெரிவித்திருந்த சேவைகளில் சில தவிர்க்கமுடியாத காரணத்தினால் இடம்பெறாதெனவும் ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர்நாயகம் திணைக்களம்,மோட்டார் போக்குவரத்து திணைக்களம், ஓய்வூதியத்திணைக்களம், பரீட்சைத்திணைக்களம் ஆகிய ஐந்து நடமாடும் சேவைகளுமே நடைபெறவுள்ளதெனவும் இதற்கான முன்னேற்பாடுகள் தொடர்பாக அந்தப் பகுதி கிராம அலுவலர்களுடனும் உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் தொடர்பு கொள்ளுமாறு முல்லை மாவட்ட அரசஅதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். (20)

# சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெற்றே பொதுக் கட்டமைப்பை உருவாக்குகின்றோம்

## பிரதியமைச்சர் ஏக்கநாயக்க

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுகாக பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெற்றுள்ளதாக சிறிலங்கா பிரதி பெருந்தெருக்கள் அமைச்சர் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறான பொதுக்கட்டமைப்பு மூலம் பெறப்படும் சமாதானம் இந்த நாட்டில் தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கு அடிப்படையானது என அவர் தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் கூறுகையில்; அடிப்படையான இந்தப் பொறுப்பை எவ்வாறு செயற்படுத்துவது அந்தப்பொறுப்பை நடைமுறைப்படுத்துவதற்கு தற்போது பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக அரசாங்கம் என்ற முறையில் சர்வதேச சமூகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இன்று தீர்வு ஒன்றை எடுத்துள்ளோம் இந்தக் கட்டமைப்பின் மூலம் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும் ஏற்படுத்தப்படுகின்ற அடிப்படை வசதிகளுடன் ஒரு கிராமிய மட்டத்திலான அபிவிருத்தி பிரதேசமும் ஒன்றிணைக்கப்படும் அதன்மூலம் உருவாக்கப்படும் சமாதானம் இந்த நாட்டின் நீண்ட காலப் போக்கிற்கான ஒரு படிமுறையாகும் ஒரு பாலத்தை உருவாக்க எமக்கு முடியும். அதுவே எமது முதல் நிகழ்ச்சி நிரல் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமய விவகாரங்களை தவிர்க்க கண்காணிப்புக் குழுவிற்கு அறிவுரை

(கொழும்பு)

சமய விடயங்களில் கருத்துக்கள் கூற வேண்டாமென கண்காணிப்புக் குழுவுக்கு நோர்வே அறிவுறுத்தியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கிழக்கிலுள்ள முஸ்லிம்கள், தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்று, கிழக்கிலுள்ள யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பொறுப்பாளர் ஸ்ரெயின் ஜோகென்சன் கடந்த வாரம் தெரிவித்த கருத்து குறித்தே இந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இத்தகைய மதரீதியான கருத்துக்களை வெளியிட்டு முஸ்லிம் மக்களின் மனங்களைக் காயப்படுத்தியுள்ளதாக நோர்வே தூதுவர் எரிக் சூல்ஹெய்மிடம் தெரிவிக்கப்பட்டதையடுத்தே, நோர்வே தூதுக்குழு இவ்வாறு அறிவுரை வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. (32)

# வவுனியாவில் ரயர் கடை மீது பெற்றோல் குண்டுத்தாக்குதல்

(செட்டிகுளம்)

வவுனியா யாழ். சாலையில் அமைந்திருக்கும் ரயர் கடை ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் இரவு 12.15 மணியளவில் பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடையினுள் ஒருவர் உறங்கி கொண்டிருந்த போது பாரியளவிலான சத்தம் ஒன்று கேட்டதாகவும் விழித்து பார்த்த போது கடையின் வெளிப்புறத்தில் இருந்த ரயர்கள் பற்றி எரிந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார் தனிப்பட்ட காரணங்களுக்காகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிசார் தெரிவிக்கின்றனர். (21)

## மே தின பேரணியில்பங்கேற்க த.பொ.மே.நி அழைப்பு!

கிளிநொச்சி நகரில் நடைபெறவிருக்கும் மே நாள் எழுச்சிப் பேரணியிலும், பொதுக்கூட்டத்திலும் விவசாயப் பெருமக்கள் அனைவரையும், கமக்கார அமைப்புக்களையும் கலந்து கொள்ளுமாறு உரிமை உணர்வோடு அழைப்பதாக கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

## மேல்மாகாண....

நிறைவுக்குக் கொண்டுவரவும் மாகாணசபையைகலைக்கவுமே அவருக்கு அதிகாரம் உண்டு. அதனால் மாகாண சபைக் கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று மாகாணசபைக் கூட்டத்தை நடத்தவுள்ளோம் என்று கூறியுள்ளார்.

அதேசமயம் மாகாண சபையில் அங்கம் வகிக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் மாகாண சபையின் குழுத் தலைவர் வருண கீர்த்தி ராஜபக்ஸ்ஸ கருத்து தெரிவிக்கையில்; -ஊழல் மற்றும் மோசடிக் குற்றச் சாட்டுகளுக்கு உள்ளான ரெஜினோல்ட் கூரே பதவி விலகவேண்டும். ஆளநருக்கு மாகாணசபைக் கூட்டத்தை ஒத்திவைப்பதற்கான அதிகாரம் இருக்கிறது இருப்பினும் இது தவறான முன்னுதாரணம் ஆகும். இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையானது முதலமைச்சருக்கு எதிரானது மட்டுமே மாகாணசபையின் செயற்பாட்டுக்கு எதிரானது அல்ல. எனக்குறிப்பிட்டார். (32)

## ஆழிப்பேரலை...

வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான பொறுப்பை தனியார் துறையிடமும் அரசசார்ப்பற்ற நிறுவனங் களிடமும் கையளிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் ஐக்கிய தேசியக்கட்சி மேலும் குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு உதவித்தொகைகளை செலவு செய்த முறை குறித்து பலத்த சந்தேகம் எழுவதனால் அது பற்றிய கணக்குகளை உடனடியாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு அக்கட்சி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது என்பது பற்றி அரசாங்கம் உடனடியாக பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்காவிட்டால் இவ்விடயம் குறித்து வெளிநாட்டு உயர்ஸ்தானிகர்களிடம் விபரங்களைத் தெரிவித்து சர்வதேச ரீதியில் அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

## யுத்த.

புலிகள்போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்குச் சுட்டிக் காட்டப்பட்டுள்ள போதும், சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது நடவடிக்கைகளை குறைத்துக்கொண்டதாக இல்லை.

## தந்தைசெல்வா....

நடைபெற்றது.

இந்நிகழ்வில் மதகுருமார்கள், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான மா.வை.சேனாதிராஜா, ம.க.ஈழவேந்தன் ,சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார்பொன்னம்பலம் பத்மினிசிதம்பரநாதன் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். நினைவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

மாலை நிகழ்வுகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. பேராயர் ஜெபநேசன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச்சுடரினை பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் ஏற்றிவைக்க தந்தை செல்வாவின் திருவுருவப்படத்திற்கு பேராயர் ஜெபநேசன் அடிகளார் மலர் மாலையை அணிவித்தார். வரவேற்புரையினை மாவை சேனாதிராஜா அவர்களும் சிறப்புரையினை பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களும் நிகழ்த்தினர். இறுதியாக நன்றியுரையினை தந்தைசெல்வா அறக்கட்டளை பொருளாளர் எஸ்.எக்ஸ் குலநாயகம் நிகழ்த்தினார். (சு,28)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது